


நமது எம்.பிக்கள் காட்டில் நல்ல மழை என்றுதான் கூறவேண்டும். தேர்தல் பருவகாலம் அல்லவா? அரச கஜானாவின் நிதிக் கருமேகங்கள் நன்கு திரண்டு நிற்கின்றன. உதவித் திட்டங்கள் மாரி மழையாகப் பொழிய வாய்ப்புக் கிடைத்திருப்பதாகத் தகவல். பக்கம் 02


பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 04 சனிக்கிழமை 21.09.2019 கதிர் 320


# ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய ஐ.தே.க. செயற்குழு செவ்வாய் கூடுகிறது

## ரணில் - சஜித் நேரடிப் போட்டி

கொழும்பு, செப்ரெம்பர் 21

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு வரும் செவ்வாய்க்கிழமை 24ஆம் திகதி கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் கூடுகின்றது என்று நம்பகரமாக அறியவந்தது.

நேரடியாகக் களத்தில் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும், கட்சியின் துணைத் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸவும் போட்டியிடுகின்றனர். பக்கம் 03



## தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார் ஜனாதிபதி



கொழும்பு, செப். 21

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆராயும் பக்கம் 03

## நிகாப், புர்கா தடையில்லை

கொழும்பு, செப். 21

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதால் நிகாப், புர்கா மற்றும் புல்பேஸ் ஹெல்மட் மீதான தடை நீங்கியுள்ளதாகப் பொலிஸ் பக்கம் 03

## ஐ.தே.மு. பங்காளித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்றும் முடிவில்லை!

### மீண்டும் கூடிப் பேசத் தீர்மானம்

கொழும்பு, செப். 21

பிரதமர் ரணில் தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்று ஒன்றுகூடி ஜனாதிபதி வேட்பாளர் குறித்துப் பேச்சு நடத்தினர். ஆனால் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. பக்கம் 03

### ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு

## அதை ஆதரிப்பதாக வாயில் கூறுவோர் நாடாளுமன்றில் அதை நிரூபிக்கலாமே!

### கோருகின்றார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, செப். 21

'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படுவதுதான் எமது நிலைப்பாடு, ஆனால் அதனை ஜனாதிபதித் தேர்தல் அறிவித்த பின்னர் முன்னெடுப்பதைத்தான் எதிர்க்கின்றோம்' – என்று கூறுபவர்கள், தமது கூற்றில் உண்மை பக்கம் 03

## சுபநேரத்தில் கட்டுப்பணம் கோட்டாபய ராஜபக்ஷ சார்பில்!



கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தாமரை மொட்டுச் சின்னத்தில் பக்கம் 03

## ராணுவத் தளபதிக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் பக்கம் 03

## ராணுவத் தளபதியிடம் காணிகளை விடுவிக்குமாறு கோரினார் ஆளுநர்



யாழ்ப்பாணம், செப். 21

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கும், வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது படையினர் பக்கம் 03

## யாழ். இந்து அதிபர் கைது ஒக். 3 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சதா நிமலன், கையூட்டுப் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய புலன் பக்கம் 03

## இராணுவத் தளபதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை



யாழ்ப்பாணம், செப். 21

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா யாழ்ப்பாணத்துக்கு நேற்று பக்கம் 03

## 92 வீதமான தனியார் காணிகளை மீள ஒப்படைத்துள்ளது ராணுவம்

### யாழ். வந்த இராணுவத் தளபதி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 21

யுத்த காலத்தில் படையினரின் தேவைக்காக எடுக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளில் 92 வீதமான காணிகள் திருப்பிக்கொடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்திருக்கும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர பக்கம் 03

## மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் 20 மாவட்டங்களில் கவனயீர்ப்பு

### 27ஆம் திகதி நடத்த ஏற்பாடு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 21

உயிர்வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தவேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட் பக்கம் 03

# ஆஸ்திரேலிய ஆர்ப்பாட்டத்தில் வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம்!




கான்பரா, செப். 21

பருவநிலை மாற்றத்தைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் இலங்கை வலைப்பந்தாட்ட அணி வீராங்கனை தர்ஜினி சிவலிங்கமும் பங்கேற்றார்.

பருவநிலை மாற்றத்தைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பாடசாலை மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை முதல் பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளை புறக்கணித்து மாணவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ஆஸ்ரேலியாவிலுள்ள பாடசாலை மாணவர்களும் நேற்றுக் காலை வகுப்பறையை விட்டு வெளியேறி வீதியிலிறங்கி போராட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள இலங்கை வலைப்பந்தாட்ட அணி வீராங்கனை தர்ஜினி சிவலிங்கமும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

காலநிலை மாற்றத்தால் பூமி எதிர்கொள்ளவுள்ள விளைவுகளை உலகெங்கிலும் உள்ள மாணவர்களும் ஏனையவர்களும் ஒரே குரலில் பேசுவதே இந்தப் போராட்டத்தின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு கோரவில்லை

## கூறுகின்றார் கரு ஜயசூரிய

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு தனக்கு வாய்ப்பளிக்குமாறு கடிதம் ஒன்றின் ஊடாகச் சபாநாயகர் கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்தார் என ஊடகங்களில் வெளியான செய்தி பொய்யானது எனச் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குமாறு பல்வேறு தரப்பினர் தன்னிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர் எனத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜயசூரிய, கடந்த 17ஆம் திகதி அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

அந்த அறிக்கையானது விடயங்களை தெளிவுபடுத்தும் வகையில் மாத்திரமே அமைந்துள்ளதுடன், அது ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கான கோரிக்கை அல்லவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவில் மக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக இணக்கம்

முல்லைத்தீவில் கேப்பாபிலவு மற்றும் ஆலங்குளம் பகுதிகளில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆலங்குளம் பகுதியில் படையினர் வசமுள்ள மக்களின் காணி விடயம் தொடர்பாக விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று பகல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் நடைபெற்றது. இதற்கு முன்னர் கேப்பாபிலவு மக்களின் காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், படை அதிகாரிகள், மாகாணக் காணி ஆணையாளர், ஆலங்குளம் பகுதியில் காணி உரிமம் கோரும் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் நிறைவில் சுரேன் ராகவன் மற்றும் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, பொதுமக்கள் ஆகியோர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தனர்.

இதன்போதே காணி விடுவிப்பு தொடர்பான இரு கலந்துரையாடல்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும், படையினரால் விடுவிக்கப்படக் கூடிய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், விடுவிக்க முடியாமலுள்ள காணிகளுக்கு மாற்றுக் காணிகளை வழங்கும் பேச்சும் இடம்பெற்றதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (ஐ)

# நெதர்லாந்து நாட்டவர் கடலில் மூழ்கி மரணம்!

திருகோணமலை, செப். 21

திருகோணமலை – குச்சவெளி புறாத்தீவு கடலில் நீராடிக் கொண்டிருந்த 73 வயதுடைய நெதர்லாந்து நாட்டவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் எனக் குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

17 பேர் கொண்ட குடும்பமாக இலங்கைக்குச் சுற்றுலா வந்திருந்த நெதர்லாந்து நாட்டவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முற்பகல் 10.55 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பெரலியாவில் பல கோடி ரூபா செலவழித்தாயிற்று. அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு எம்.பிக்கும் நேரடியாக அவரது கண்காணிப்பின் கீழான திட்டத்தில் செலவிடுவதற்கு அடுத்த கட்டமாகத் தலா பத்துக் கோடி ரூபா ஒதுக்கப்படுகின்றது.

கம்பெரலியா நிதித் திட்டங்களைச் செலவிடுவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மாதிரி இந்தத் திட்டத்துக்குக் கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் இருக்காவாம். நேரடியாக அந்தந்த எம்.பியின் பரிந்துரையில் இத்திட்டத்தின் கீழான நிதி செலவிடப்படும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தனிக்குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்கான தையல் மெஷின், நீரிறைக்கும் இயந்திரங்கள், சைக்கிள்கள் போன்றவை கூட இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட முடியுமாம்.

தேர்தல் முன்னோட்டமாக இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு எம்.பிக்கும் ஆயிரம் லட்சம் (பத்துக் கோடி) ரூபா ஒதுக்கப்படுகின்றது.

பிறகென்ன? தேர்தல் திருவிழாவுக்கு முந்திய கொண்டாட்டம் படுஜோர்தான் பாருங்கோ...!

நேற்று முன்தினம் மாலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கும் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் நிதி அமைச்சு அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில் இவ்விடயம் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டது.

கூட்டமைப்பினருக்கு இது மகிழ்வான செய்தி என்றாலும், இன்னொரு கவலையான தகவலும் நிதி அமைச்சரால் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கென பனை நிதியம் என்ற திட்டம் பெரும் ஆரவாரமாகத் தொடங்கப்பட்டதல்லவா?

அதற்குஇவ்வாண்டில்குறைந்த பட்சம் ஐந்து பில்லியன் (ஐந்நூறு கோடி) ரூபா நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனக் கூட்டமைப்பு வலியுறுத்தியது. பிடிவாதமாக நின்றது.

இந்த வருடத்துக்கும் அடுத்த வருடத்துக்குமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஐந்நூறு கோடி ரூபா பனை நிதியத்தின் கீழ் வடக்கு, கிழக்கு வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் என அரசுத் தரப்பினர் ஏற்றுக் கொண்டனர். இரண்டு ஆண்டுகளுக்குத் தமிழர் தாயக அபிவிருத்திக்கு ஐந்நூறு கோடி ரூபா என்று பெரும் பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி இவ்வாண்டு 2.5 பில்லியன் (அதாவது 2,500 கோடி) ரூபா செலவிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அது குறித்தும் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள் நிதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இதுவரை திருகோணமலை மாவட்டத்துக்கு மட்டும் இரா.சம்பந்தன் எம்.பியின் கோரிக்கையின் பேரில் இத்திட்டத்தின் கீழ் இரு நூறு கோடி ரூபா செலவிடப்பட்டது எனக் கூறப்பட்டது.

அப்படியானால் இவ்வாண்டுக்குரிய எஞ்சிய 2,300 கோடி ரூபா எங்கே, அது எப்போது வரும் என்று கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர்.

இவ்வாண்டுக்கான 2500 கோடி ரூபாவில் ஆக 25 வீதம் தான் இவ்வாண்டில் தரமுடியும் என்று கைவிரித்து விட்டார் நிதி அமைச்சர். அதாவது இந்த ஆண்டில் எட்டுத் தமிழ் மாவட்டங்களுக்கும் பனை நிதியத்தின் கீழ் ஆக 625 கோடி ரூபா ஒதுக்கீடுதான் கிடைக்கும். அதில் 200 கோடி ரூபா செலவிடப்பட்டுவிட்டது. எஞ்சிய 425 கோடி ரூபாதான் இனி மேல் வரும் என்று கூறப்பட்டது.

கேட்டது ஐயாயிரம் கோடி ரூபா. தர இணங்கியது 2 ஆயிரத்து 500 கோடி ரூபா. ஆனால் தர இப்போது முன்வந்திருப்பது ஆக 625 கோடி ரூபா. அதில் 200 கோடி ரூபா தந்தாகி விட்டது. எஞ்சிய 425 கோடி ரூபாவும் வரும் நேரத்தில் கண்டு கொள்ள வேண்டியதுதான்.

பனை நிதியத்துக்கென ஒரு சட்ட மூலம் நாடாளுமன்றுக்கு விரைவில் வருமாம். அது வரும் போது அதில் இந்த 625 கோடி ரூபா ஒதுக்கீடு குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்குமாம். இத்தகவலும் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குக் கூறப்பட்டது.

ஆக, இந்தப் பனை நிதியத்தின் கீழ் இவ்வாண்டு 8 மாவட்டங்களுக்கும் எஞ்சிய 425 கோடி ரூபா கிடைக்கும். அதாவது மாவட்டத்துக்கு 53 கோடி ரூபா.

அபிவிருத்தி விடயத்தில் மூக்குத்தூள் போடும் வேலைக்குத் தான் இது காணும் என்று சினந்தார் ஒரு கூட்டமைப்பு எம்.பி.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடனான இக் கூட்டத்துக்கு கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்களும் வந்திருந்தார்களா என்று அவர்களில் ஒருவரிடம் கேட்டேன்.

அவர் சிரித்து விட்டு *"நீங்கள் தானே பழமொழி வீரர். அதனால் உங்களிடம் அதே பாணியில் பதில் கூறுகின்றேன். 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்பார்கள். நிதி விவகாரம் அல்லவா? தவறாமல் பெரும்பாலும் அனைத்து எம்.பிக்களும் பிரசன்னம் தந்தனர். கிழக்கில் இருந்து ஒருவர் மட்டும் – கோடீஸ்வரன் மட்டும் – வரவில்லை."* – என்றார் அவர்.

நிதி அமைச்சர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் முன்னிரவில் முடிந்ததும் ஏனைய எம்.பிக்கள் யாவரும் நிதி அமைச்சு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் மட்டும் சற்று நேரம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடன் தனியாகக் குசுகுசுத்து விட்டுச் சென்றனர் என்றும் தெரிகிறது.

இப்போது ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸாவைக் களம் இறக்க வேண்டும் என்று முன்னணியில் நிற்பவர் – துடியாய்த் துடிப்பவர் – மங்கள சமரவீர என்பது தெரிந்ததுதான்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தாம் முன்வைக்கப்போகும் தீர்வுத் திட்டம் யாது என்பதை வெளிப்படையாகவும், அதை நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாடு எத்தகையது என்பதை தெளிவாகவும், சஜித் பிரேமதாஸா பகிரங்கப்படுத்தாத வரை, அவர் வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டாலும் கூட அவருக்கு ஆதரவு வழங்கக் கூட்டமைப்பு இணங்காது என்ற தகவலை கூட்டமைப்புத் தலைவர்கள் மங்களவிடமும் அதன் மூலம் சஜித்திடமும் இந்தக் குசுகுசுப்பின் போது தெரியப்படுத்தினர் என்று அறியவந்தது.

★ ★ ★

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது சம்பந்தமான முயற்சிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நேற்றும், முன்தினமும் இப்பத்தியில் விலாவாரியாக எழுதியிருந்தேன்.

அது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் சில மறுப்புத் தகவல்களை முன்வைத்துள்ளார்.

*"இத்தகைய முயற்சிக்கு ஆதரவு தருவது குறித்து சாதகமாகப் பரிசீலிக்கத் தயார் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் நேற்றுக்காலை குறிப்பிட்டமை இந்த முயற்சிக்கு சாதகமான அம்சமாகப் பார்க்கப்பட்டது."* – என்று நேற்று முன்தினம் எழுதியிருந்தேன்.

அன்று, அது குறித்து அமைச்சர் மனோகணேசன் எந்தப் பிரதிபலிப்பையும் எமக்குக் காட்டவில்லை. (அன்றைய நாளிதழை வாசிப்பதற்குத் தமக்கு நேரம் கிடைக்கவில்லை என அவர் கூறுவதை ஏற்போம்.)

இதேசமயம், நேற்றைய காலைக்கதிரில் –

*"இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கலாம் என்று நேற்று முன்தினம் சுமந்திரனிடம் உறுதிகூறிய அமைச்சர் மனோ கணேசன் நேற்று விசேட அமைச்சரவைக்கு முந்திய கூட்டத்தில் திடீர் அந்தர் பல்டி அடித்து அந்த முயற்சியை எதிர்த்து நின்றமை எதிர்பாராத திருப்பம்."* – என்று குறிப்பிட்டிருந்தேன்.

இதை ஒட்டி நேற்றிரவு அமைச்சர் மனோ கணேசன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

பின்வரும் விடயங்களை அவர் குறிப்பிட்டார்.

1. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கூடாது என்பதுதான் எமது கட்சியின் மாற்ற முடியாத நிலைப்பாடு.

2. எந்தச் சந்தர்ப்பத்திலும் அதை ஒழிப்பதை சாதகமாகப் பரிசீலிக்கத் தயார் என சுமந்திரனிடமோ வேறு எவரிடமோ நான் கூறவில்லை.

3. விசேட அமைச்சரவைக்கு முந்திய கூட்டத்தில் நான் பங்குபற்றவில்லை. ஆனால் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் அத்திட்டத்தை நான் முழுமையாக எதிர்த்தேன். அது எமது கட்சியின் நிலைப்பாடு.

– இவ்வாறு அமைச்சர் மனோ கணேசனின் மறுப்புத் தகவல் அமைந்தது.

அதை அப்படியே தருகிறேன். தருவது நான்; தீர்மானிப்பது நீங்கள்.

– மின்னல் –

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமைக் கூட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இணக்கமான முடிவு ஒன்று எட்டப்படாவிட்டால் செயற்குழுவில் தேர்தல் மூலம் வேட்பாளர் தெரிவு இடம்பெறும் என்றும் கூறப்பட்டது.

ஐ.தே.கவின்யாப்பின்91ஆவது பிரிவின்படி வேட்பாளரை கட்சியின்செயற்குழுவேதெரிவுசெய்ய வேண்டும் எனக் கட்சி வட்டாரங்கள் சில சுட்டிக்காட்டின.

ஜனாதிபதி வேட்பாளர்களாக ரணசிங்க பிரேமதாஸ, காமினி திஸநாயக்க, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் கட்சியின் செயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்டனர் என்றும் –

2010 தேர்தலில் சரத் பொன்சேகாவையும், 2015 தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவையும் வேட்பாளராக நிறுத்தும் தீர்மானமும் கூட ஐ.தே.கட்சியின் செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் – அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் –

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பளரைத்தெரிவுசெய்வது குறித்து ஐ.தே. முன்னணியின்பங்காளித் தலைவர்கள் இடையே நேற்று மாலை நடைபெற்ற கூட்டமும் இணக்கம் ஏதும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸா, கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஒரு பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரிவின்றி, இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஐ.தே.க. வேட்பாளர் தெரிவு இடம்பெற வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் தீர்மானித்தனர் என்றும் –

இது குறித்து தொடர்ந்தும் பேசுவது என முடிவெடுக்கப்பட்டது என்றும் மேலும் கூறப்பட்டது.

செவ்வாய்கிழமைக்கு முன்னர் இணக்கமான தீர்வு ஒன்று எட்டப்படாவிட்டால், கட்சியின் செயற்குழுவில் வாக்கெடுப்பு மூலம் வேட்பாளர் தெரிவாவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தெரிவுக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெரிவுக்குழுவினால் தமது கருத்துக்கள் மற்றும் முன்மொழிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கையைக்கவனத்தில்கொண்ட ஜனாதிபதி, ஜனநாயகத்தை மதிக்கும் தலைவர் என்ற வகையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுடன் இந்தச் சந்திப்புக்கு இணக்கம் தெரிவித்திருந்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று தெரிவுக்குழு முன்னிலையில் மைத்திரி சாட்சியமளிக்கும் போது ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலேயே தெரிவுக்குழு முன்னிலையில் மைத்திரி நேற்று சாட்சியமளித்திருந்தார். (ஐ)

## ஐ.தே.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் செயற்குழுவைக் கூட்டி முடிவை எடுப்பதற்கு இங்கு யோசனை தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்திலும் பெரும்பாலானகட்சித்தலைவர்கள் அமைச்சர் சஜித்தையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வலியுறுத்தியிருந்தனர். (ஐ)

## நிகாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

பல பொது இடங்களில் முஸ்லிம்கள் பல்வேறு பிரச்சினைகளைஎதிர்கொள்வதால்அதுதொடர்பில்அமைச்சர்ஹலீம்பொலிஸாரிடம்வினவியமையையடுத்தேஅவருக்குப்பதிலளித்துஇந்தஅறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக இருப்பார்களாயின் –

அந்த ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பான தங்களின் தெளிவான நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் காட்டுவதற்காக அது தொடர்பான அரசமைப்புத் திருத்தத்தைநாடாளுமன்றிலாவது அவர்கள் நிறைவேற்றிக் காட்ட முன்வர வேண்டும்.

– இப்படிக் கோரியிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதையும், அந்த அரசமைப்பச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதையும் வேண்டுமானால் அவர்கள் கூறுகின்றபடி அறிவிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் முன்னெடுக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் நாடாளுமன்றம் தன்பாட்டில் இயங்குகின்றது. அதில் தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதில்அவர்களுக்கு என்ன தயக்கம்? வாயினால் கூறுவதில் அவர்கள் உண்மையாக இருப்பார்களாயின் நாடாளுமன்றத்தில் அதனை அவர்கள் செயலில் காட்ட வேண்டும் – என்றும் சுமந்திரன் கூறினார். (உ)

## ராணுவத்தளபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகச் சுழற்சி முறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டவர்கள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் வடக்குக்கான வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

ஐ.நாவே போர்க்குற்றவாளி சவேந்திர சில்வாவைக் கைது செய், தமிழர்களின் பாதுகாப்புக்கு ஐ.நா அமைதி காக்கும் படையை உடனடியாக அனுப்பு என்ற வாசகம் பொறிக்கபட்ட பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கக் கொடிகளையும் கையில் வைத்திருந்தனர். (ஐ-07)

## இராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து நல்லை ஆதீனத்துக்கும் சென்று ஆதீன முதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்

இதன் பின்னர் யாழ்.நாக விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டமையுடன் விகாராதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (ஐ-07)

## சுபநேரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடும் வேட்பாளர் கோட்டாபயராஜபக்ஷவின் சார்பில் நேற்று வெள்ளிக்கிழமை கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் சுபநேரமான நண்பகல் 12.14 மணிக்குக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது என புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ உட்பட மஹிந்த அணியின் முக்கியஸ்தர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் செப்ரெம்பர் 19ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 6ஆம் திகதி மதியம் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி அரசியல் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்பில் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பணமாக தேர்தல்கள் செயலகத்தில் செலுத்த வேண்டும்.

இதுவரையில் நான்கு பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை, ஒக்ரோபர் 7ஆம் திகதி, வேட்புமனுத் தாக்கல் இடம்பெறும். அன்று காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

## யாழ். இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழுவால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

அவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அன்றைய தினம் அவரைக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நீதிமன்றம் அனுமதியளித்தது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மாணவர் அனுமதிக்குக் கையூட்டுப் பெற்று ஊழலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அந்தக் கல்லூரியின் அதிபர் சதா நிர்மலன் நேற்று நண்பகல் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிச்ச சாட்டுதல்களை புலன் விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

அவரை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த ஆணைக்குழு அதிகாரிகள், நேற்று மாலை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். பருத்தித்துறை பொலிஸ் ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சதா நிமலன் முற்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## ராணுவத்தளபதியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு படைத்தளபதியிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆளுநர்செயலகத்தில்நேற்று இந்தச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

போருக்குப்பின்னரானவடக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து இராணுவத் தளபதி, ஆளுநருக்கு இதன்போது விளக்கமளித்தமையுடன்தனதுதலைமைத்துவத்தின் கீழ் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வேன் என்றும் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதியாக மைத்திரிபாலசிறிசேனபதவியேற்ற தன்பின்னர் இராணுவத்தின்செயற்பாடுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டமையைக்குறிப்பிட்ட ஆளுநர், வடக்கு மாகாணத்தில் அதனைக்கண்கூடாகக்காணக்கூடியதாகஉள்ளதுஎன்றும்தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாணத்தில் நிலவும் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆளுநர், இராணுவத்தின் பாவனையிலுள்ள தனியார் காணிகளில் விடுவிக்கக் கூடிய காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவத்தினரால் விடுவிக்க முடியாத காணிகளை இனங்கண்டு அவற்றையும் விடுவிக்கவேண்டும் என்றும் ஆளுநர், இராணுவத்தளபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்துதெரிவித்த இராணுவத்தளபதி, இராணுவத்தின் பாதுகாப்புத் தேவைகளுக்காக வைத்திருக்க முடியுமான காணிகள் தவிர ஏனைய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளை இன்னும் விடுவிக்கக்கூடியனவாகஉள்ளகாணிகள் இருப்பின்அவற்றையும்ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (ஐ)

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் உட்பட 20 மாவட்டங்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், உயிர் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்துக எனும் தொனிப்பொருளில் யாழ் பாடியில் ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தவை வருமாறு:–

உயிர்வாழும்உரிமை அனைவருக்கும்உள்ளது. இதனடிப்படையில் உயிர் வாழும் சட்டம் அயல் நாடுகளில் உள்ளது. ஆனால் இலங்கையில் அந்தச் சட்டம் இல்லை. ஆகவேபுதிய அரசமைப்பில்உயிர்வாழும்உரிமைச்சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

இதனூடாக உயிர் வாழும் உரிமை அடிப்படையாக்கப்பட்டு உயிர் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். உயிர் வாழ்வுக்கான உரிமையை விட்டு விட்டு ஏனைய உரிமையைப் பற்றிப்பேசுவதில்அர்த்தமில்லை. உயிர்வாழும் உரிமையே முதன்மையானது. அதனை ஐ.நா. சபையும் முதன்மைப்படுத்த வேண்டும்.

ஆகவே உயிர்வாழும் உரிமையை அரசியல் யாப்பில் இணைத்துக் கொண்டு அந்த உரிமையை உறுதிப்படுத்தவேண்டும். இதனை வலியுறுத்தி இலங்கையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு என வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் உட்பட மொத்தமாக 20 மாவட்டங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

வாழும் உரிமையை அடிப்படைஉரிமையாகஏற்றுக்கொண்டால் பாதுகாப்பும் நல்வாழ்வும் கிடைக்கும். இனம், மதம், மொழி கடந்து இந்தச் செயற்பாட்டைச் செய்யவேண்டும். இனத்தின் மொழி கடந்த ஐக்கியத்தை உருவாக்கவேண்டும்

நீதியுடன் கூடிய சமாதானம் மலரும். இந்த நாட்டவர்களும் நாங்கள் எல்லலோரும் அன்போடும் உரிமையுடனும் வாழ இந்த சட்டம் வழி வகுக்கும் – என்றனர்.

இந்தச் சந்திப்பில் பிரஜைகள் அபிலாஷை வலையமைப்பின் தேசிய இணைப்பாளர் பிரான்சிஸ் ராஜன், மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவர் சட்டத்தரணி ஆ.ரகுபதி, அமெரிக்க இலங்கை மின் திருச்சபை முன்னாள் தலைவர் அருட்தந்தை ஈனொக். பூ. புனிதராஜா, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் நா.இன்பம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## 92 வீதமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா, மீதமுள்ள காணிகள் பொதுமக்கள் பயன்படுத்தும் பலாலி விமான நிலையத் தேவைகளுக்காகவே இருக்கின்றன எனவும் குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதியாக புதிதாகப் பதவியேற்ற பின்னர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சவேந்திர சில்வா வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். அந்த வழிபாடுகளைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் 23 ஆவது இராணுவத் தளபதியாக ஜனாதிபதியால் நான் நியமிக்கப்பட்டிருக்கின்றேன். நான் பதவியேற்ற பின்னராகதற்போது யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள இராணுவமுகாம்களை பார்வையிட்டு இராணுவத்தினருடனும் கலந்துரையாடி நிலைமைகளை ஆராய்ந்துள்ளேன்.

இங்கு எங்களது கட்டளை பீடமும் உள்ளது. யாழ்ப்பாணம் என்பது சாதாரண இடமல்ல. அது பெறுமதியான இடம். இந்த நகரத்துக்கு வந்து இங்குள்ள விகாரைக்குச் சென்றேன். அதனைத் தொடர்ந்து எல்லோருக்கும் அருள் கொடுக்கின்ற நல்லூர் முருகனிடமும் வந்திருக்கிறேன்.

நான் இராணுவத்துக்கு வந்த பின்னர்தான் நல்லூர் கோவிலைத் தெரிந்து கொண்டவன் அல்லன். சிறுவயதில் இருந்தே எனக்கு நல்லூர் கோவில் தெரியும். என் அப்பாவுடன் இங்கு வந்தேன். எனக்கு யாழ்ப்பாணம் புது இடமல்ல. என் அப்பாவுடன் ஒவ்வொரு வருடமும் வருவேன். இந்தப் பிரதேச மக்கள் சுதந்திரமாக வாழப் பங்களிப்புச் செய்தவன் என்ற வகையில் எனக்குச் சந்தோசம்.

யாழ்ப்பாண மக்கள் எதிர்பார்த்த வாழ்க்கை முறை இப்போது அவர்களுக்குக் கிடைத்துள்ளது. அவர்களது சுதந்திரமான, பாதுகாப்பான, கௌரவமான வாழ்க்கை முறைக்காக இராணுவம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதே போன்று தொடர்ந்தும் இராணுவம் பணியாற்றும். இங்கு திறமையான ஒருவர் ஆளுநராக இருக்கிறார் – என்றார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சஜித் அணியின் செயற்பாட்டால் வரலாற்று வாய்ப்புத் தவறியது

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான அருமையான ஒரு முயற்சி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸாவினாலும் அவரது அணியினராலும் ஆப்படித்துக் குழப்பப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் எம்.பி. கூறியமை போன்று, சந்தர்ப்பவாதமும் சுயநல அரசியலும் உச்சம் பெற்ற நடவடிக்கையின் விளைவே இந்தச் செயற்போக்கு என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வந்தது ஐக்கிய தேசியக் கட்சிதான். அதன் தலைவரும் தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் இடம்பெற்றிருந்த அரசுதான் 1978 இல் இந்த ஆட்சி முறையைக் கொண்டு வந்தது.

பதினாறு ஆண்டுகள் கழிந்து அப்பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைகளுக்கு மாறியமை முதல் –1994 இல் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஜனாதிபதியான காலம் தொட்டு – கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளாக அந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஐ.தே.கட்சி பின்பற்றி வந்திருக்கின்றது.

*'ஐக்கிய தேசியக் கட்சியின் கால் நூற்றாண்டு கால வாக்குறுதி'* என சுமந்திரன் சுட்டிக்காட்டியது இதனைத்தான்.

இன்றைய நிலையில் தம்முடைய சுயநல அரசியல் இலக்கை எட்டுவதற்காக –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சரவையிலும் கட்சியிலும் பலவீனப்படுத்தி, கட்சியின் வேட்பாளர் நியமனத்தைத் தட்டிப் பறிக்கவும் –

இந்த மூன்றாம் தர அரசியல் நடவடிக்கையை சஜித் தரப்பு எடுத்திருக்கின்றது என்பது துலாம்பரமான விடயம்.

சுமந்திரன் கூறியிருக்கின்றமைபோல நிறைவேற்று அதிகாரத்தை எந்த நேரத்திலும் – எந்தச் சமயத்திலும் – ஒழிப்பது என்பது கொள்கை ரீதியான முடிவு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைத்தான் கூறியிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் கூட அதனைத்தான் தனது கால் நூற்றாண்டு கால நிலைப்பாடாகக் கட்சி ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் பின்பற்றி வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

ஆனால், அக்கட்சிக்குள்ளேயே ஓர் அணி அத்தகைய கொள்கை நிலைப்பாட்டுக்கு ஆப்புவைத்து *'சின்னத்தனமாக'* நடந்திருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்பது கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளாக நான்கு, ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களில் பிரதான கோஷமாக வைக்கப்பட்டே வந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்கள் மட்டுமல்லர், சுதந்திரக் கட்சியின் சார்பில் இருப்பத்தியொரு ஆண்டுகள் அரசுக்கட்டில் கோலோச்சிய சந்திரிகா குமாரதுங்கவும், மஹிந்த ராஜபக்ஷவும் கூட ஜனாதிபதித் தேர்தல்களின் போது எழுத்து மூலமும், வாய் மூலமும் இந்த ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றாக ஒழிப்போம் என்று கூறித்தான் ஆட்சிக்கு வந்தார்கள்; தேர்தலில் வென்றார்கள்.

ஏன், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட அதையே பிரதான வாக்குறுதியாக அளித்து பதவிக்கு வந்தார் என்பது மறுக்கக் கூடியதல்ல.

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேர்தல் பேசப்படும் இந்த விடயத்தை ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி கிடைத்த வாய்ப்பின் போது நிறைவேற்றுவதில் என்ன தப்பு அல்லது தவறு இருக்க முடியும்?

தேர்தலின் பின்னர் அதிகாரத்துக்கு வரும் எந்த ஜனாதிபதியும் இந்த வாக்குறுதியை நிறைவேற்ற முன்வருவதே இல்லை என்பதே நடைமுறை விடயமாக இருக்கும்போது, தேர்தல் சமயத்தில் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எட்டி உதைத்திருப்பது மன்னிக்கக் கூடிய அரசியல் செயல்பாடு அல்ல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையே தமிழர் மீதான தென்னிலங்கைச் சிங்களத்தின் கொடூர அடக்குமுறையை அது ஈவு இரக்கமின்றி, குரூரமாக ஏவிவிடக் காரணமாயிற்று. தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்கான சர்வாதிகார – எதேச்சாதிகார – வலிமையை அந்த ஆட்சிமுறைமைதான் கொழும்புக்கு வழங்கியது என்பது எமது பட்டறிவு.

அந்த முறைமையை அகற்றுவதற்கு – இல்லாதொழிப்பதற்கு – கிடைத்த அபூர்வமான வரலாற்று வாய்ப்பை ஐ.தே. கட்சிக்குள் இருந்த கோடரிக்காம்புகளே சிதறடித்திருக்கின்றன என்பது கவனிக்கத்தக்க விடயம்.

எதிர்காலத்தில் தென்னிலங்கையுடன் தமிழர் தரப்பு சமரச முயற்சிகளில் – தீர்வு நடவடிக்கைகளில் – ஈடுபடும் போது, தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய சமயத்தில் தராசு தட்டில் கணக்கெடுக்க வேண்டிய முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும்; இருக்க வேண்டும்.

## கனடாவில் கொல்லப்பட்ட தர்ஷிகாவின் இறுதிக் கதறல் நீதிமன்றத்தில் ஆதாரம்!

கனடாவில் தன் முன்னாள் கணவனால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட தர்ஷிகா ஜெகநாதன் இறக்க முன்னர் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு ஏற்படுத்திய அழைப்பு மற்றும் அவரது கதறல் ஒலிப்பதிவு நீதிமன்றத்தில் முக்கிய ஆதாரமாக முன்வைக்கப்படவுள்ளது.



தனது கணவர் சசிகரன் தனபாலசிங்கம் தன்னை கத்தியுடன் துரத்தும்போது தர்ஷிகா ஜெகநாதன், 911 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு எடுத்திருந்தார். அவர் இணைப்பிலிருக்கும்போதே வெட்டிக்கொல்லப்பட்டார்.

கத்தியால் வெட்டப்பட்டு இரத்தம் சொட்டச் சொட்ட கதறிக்கொண்டே அவர் ஓடியபோது, அவரது கதறல் அவசர உதவி மையத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது. உயிர் போகும் வரை தர்ஷிகா எழுப்பிய மரண ஓலம் நீதிமன்றத்தில் சாட்சியமாக ஒலிக்க இருக்கிறது.

அத்துடன் எட்டு வயது குழந்தை ஒன்று அந்தக் கோர தாக்குதலை கண்ணால் பார்த்திருக்கிறது.

இதற்கிடையில் மனைவியைக் குத்திக் கொலை செய்த சசிகரன், நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது சசிகரன் ஒருமுறை நீதிமன்றத்தை தன் கண்களால் சுற்றிப் பார்த்து விட்டு, தலையைக் குனிந்து கொண்டார். மீண்டும் அவர் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருக்கிறார்.

## ஐ.தே.கவுக்குள் உள்ள போட்டி மஹிந்த தரப்பினருக்கு சாதகம்

### சிவமோகன் எம்.பி. சுட்டிக்காட்டு



வவுனியா, செப். 21

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள போட்டி மஹிந்த அணிக்கு சாதகமாக அமைந்தால் எதிர்காலத்தில் இராணுவ ஆட்சி ஏற்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஐக்கிய தேசியக் கட்சியினர் இரண்டு பிரிவுகளாகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தலைமையை நோக்கி முக்கிய அமைச்சர்களும், அமைச்சர் சஜித் பிரேமதாஸவுடன் கீழ்மட்ட தலைவர்களும், கிராம மட்டத் தலைவர்களும் ஒன்றிணைந்து இருக்கின்றமையை உணரமுடிகிறது.

இவர்களுடைய போட்டி இறுதியில் மஹிந்த அணியினருக்குச் சாதகமாக அமையுமாகவிருந்தால் சில வருடங்களில் இராணுவ ஆட்சி ஒன்று இந்த நாட்டில் ஏற்படுவதற்குரிய நிலைமையை உருவாக்கி வைத்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்–என்றார்.

(ஐ–100)

## சு.கவின் வேட்பாளர் தயாசிறி ஜயசேகரவா?

### பெரமுன பிரமுகர் நையாண்டிக் கேள்வி

கொழும்பு, செப்.21

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தயார் நிலையில் இருக்கின்றாரா என்ற சந்தேகம் எழுவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செஹான் சேமசிங்க எம்.பி. இப்படிக் கேள்வி எழுப்பினார். இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடும் எனத் திரும்பத் திரும்ப தயாசிறி ஜயசேகர கூறிவருகின்றமையை ஒட்டியே இந்தக் கேள்வியை அவர் எழுப்பினார்.

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கும் பெரும்பாலானவர்கள், மத்திய வங்கி கொள்ளையுடன் குற்றம்சாட்டப்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இரு நூல் அறிமுக விழா

இணுவில் , செப்.21

இலங்கை சைவ செறிக் கழகத்தின் அலகிலா ஆடல் - சைவத்தின் கதை சிவப்பிரகாசக்கதவம் என்னும் இரு நூல்களின் அறிமுக விழா இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள அறிவாலயம் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

சிவநெறிப் பீடுடை விருந்தினர்களாக செஞ்சொற்செல்வர், ஆறு. திருமுருகன், சைவப்புலவர் மு.ஞானசம்பந்தம்பிள்ளை, சைவப்புலவர், சு.செல்வத்துரை, சைவத்திரு ஏகாம்பரம் ரவிவர்மன் ஆகியோரும் மாண்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முது நிலைப் பேராசிரியர்கள் இந்து கற்கைகள் பீடத்தின் துறைசார் தலைவர்களும், சிறப்பு விருந்தினர்களாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதுடன், திருவருட் தலைமையாக நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம் பெருமானார் எழுந்தருள்வதுடன் குருவருளாக சிவத்திரு. சி.குமாரராஜாக்குருக்களும், சிவத்திரு.ஏ.தற்புருஷ அனுசாசனந்த தேசிகரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**நாளை** 22.09.2019 ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.ப. 8.26 வரை இராகுகாலம் : 4.32 – 6.02
திதி : அட்டமி பி.இ. 3.14 வரை சுப நேரம் : 9.02 – 10.32

# கோட்டாவுக்கு முஸ்லிம்கள் பொலனறுவையில் வரவேற்பு





கொழும்பு, செப். 21

பொலனறுவைக்கு சென்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கதுருவெலையில் முஸ்லிம் மக்களால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு அந்த மக்களின் குறை நிறைகளை அவர் கேட்டறிந்தாரெனக் கூறப்பட்டது. (ஐ)

# மின்னல் தாக்கி விவசாயி சாவு!

மட்டக்களப்பு, செப். 21

மட்டக்களப்பு - வாழைச்சேனை, காவத்தமுனை புதுவெளிப் பாலம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை புதுவெளிப் பாலம் பகுதியில் வயல் வேலை செய்து கொண்டிருக்கும் போது நேற்று முன்தினம் மாலை மின்னல் தாக்கியதில் மீராவோடை எம்.பி.ஸீ.எஸ்.வீதியைச் சேர்ந்த முஸ்தபா அஸ்பர் (வயது - 46) என்பவர் மரணித்துள்ளார். (ஐ)

# சாமிமலை நெடுங்குடியிருப்பில் தீ விபத்து;13 வீடுகள் எரிந்து நாசம்

கொழும்பு, செப். 21

மஸ்கெலியா, சாமிமலை கொழும்பு தோட்டத்தி லுள்ள 28 அறைகளைக்கொண்ட நெடுங்குடியிருப்பில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தால் 13 வீடுகள் சேதமடைந்துள்ளன.



அத்துடன், பொருள் தேசமும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் உதவியுடன் தீப்பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அப்பகுதி கிராம சேவகர் எஸ். சுரேஷ் தெரிவித்தார்.

தீ விபத்தையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மஸ்கெலியா பொலிஸார், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தீப்பரவலுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இந்த நெடுங்குடியிருப்பில் வசித்து வந்த 140 அங்கத்தவர்களில் 29 பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

நிர்க்கதியான மக்கள் தோட்ட ஆலய மண்டபத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்தார். (ஐ)

# நிறைவேற்றதிகார ஒழிப்பு குறித்து இப்போது பேசுவது வெட்கக்கேடு

## அமைச்சர் சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலுக்கு திகதி அறிவிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு பேச்சு நடத்துவது வெட்கக்கேடான செயல் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் அமைச்சர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதனை இதற்கு முன்னர் செய்திருக்கலாம். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இவ்வாறான விடயம் தொடர்பில் பேசுவது குறித்து என்னால் கற்பனை செய்வதற்கும் கடினமாக உள்ளது. வெற்றிப் பெறும் கூட்டணி என்னிடம் உள்ளது. இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்பாடாது – என்றார். (ஐ)

# பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் தமிழ் மக்கள் பேரவை முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 21

தமிழ் மக்கள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டிருந்த எழுக தமிழ் – 2019 நிகழ்வில் நேரடியாகச் செயற்பட்டிருந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் தமிழ் மக்கள் பேரவை சார்பில் எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் முக்கிய சந்திப்பொன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளனர்.

எழுக தமிழ் – 2019 எழுச்சிப் பேரணிக்கான பரப்புரை நடவடிக்கையின் போது சந்தித்துக் கலந்துரையாடியிருந்த பொது அமைப்புகளின் சார்பில் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு கருத்துகள் கேட்கப்பட்டதுடன் மக்களின் நிலைப்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அத்துடன், தமிழ் மக்கள் பேரவையை காத்திரமான மக்கள் இயக்கமாக முன்கொண்டு செல்வது குறித்தும் ஆக்கபூர்வமான கருத்தாடல்கள் இடம்பெற்றிருந்தன.

எழுக தமிழ் – 2019 நிகழ்வின் போது சந்தித்திருந்த வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் பொது அமைப்புகளில் தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயல்பட ஆர்வமும் விருப்பும் கொண்டவர்களைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல் ஒன்றை செய்வதற்கு முன்னோடியாக இச்சந்திப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ் கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெற்ற இந்தக்கலந்துரையாடலில் திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ் மாவட்டங்களைச் சேர்ந்தசுமார் முப்பதிற்கு மேற்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.





# இந்தியாவும் பாகிஸ்தானும் விருப்பினால் காஷ்மீர் சர்ச்சைக்கு ஐ.நா. மத்தியஸ்தம்

## பொதுச்செயலாளர் அண்டோனியா குட்ரெஸ் தெரிவிப்பு

இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் கேட்டுக் கொண்டால் காஷ்மீர் விடயத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயார் என ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியா குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு ரத்து செய்ததைத் தொடர்ந்து இப்பிரச்சினையை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்ல முயன்ற பாகிஸ்தானின் முயற்சிகள் தோல்வியடைந்தன.

இந்தநிலையில் ஐ.நா. சபையின் 74 ஆவது பொதுச்சபைக் கூட்டம் நியூயோர்க்கில் வரும் 24 ஆம் திகதி தொடங்கி 30 ஆம் திகதி வரை வரை நடக்க



உள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் காஷ்மீர் விவகாரம், சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது ஆகியன குறித்தும் பிரச்சினையை எழுப்ப பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் செய்தியாளர்களைச் சந்தித்த ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியா குட்ரெஸ், காஷ்மீரில் மனித உரிமைகள் முழுமையாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் தான் தெளிவாக இருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

மேலும் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் விரும்பினால் காஷ்மீர் விடயம் குறித்த பேச்சுக்கு மத்தியஸ்தம் செய்ய ஐ.நா. சபை தயாராக இருப்பதாகவும் அண்டோனியா குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

# அமிதாப்பச்சனின் வீட்டின் முன்பாக கல்லூரி மாணவர்கள் போராட்டம்

மும்பை,செப்.21

ஆரே கொலனியில் மெட்ரோ ரயில் பணிமனை அமைக்க நடிகர் அமிதாப் பச்சன் ஆதரவு தெரிவித்தமையைக் கண்டித்து மும்பை ஜுகுவில் உள்ள அவரது வீட்டுக்கு முன் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை பரபரப்பை ஏற்படுத்தியது.



மும்பையில் செயல்படுத்தப்படும் 3 ஆவது மெட்ரோ ரயில் திட்டத்தின் கீழ் ஆரே கொலனியில் பணிமனை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அங்கு 2,700 மரங்கள் வெட்டப்பட உள்ளன. இதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சினிமா நட்சத்திரங்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன் ஆரே கொலனியில் மெட்ரோ ரயில் பணிமனை அமைவதற்கு ஆதரவு தெரிவித்து டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்தார்.

இதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். சிலர் மும்பை ஜுகுவில் உள்ள அவரது ஜல்சா பங்களா வீட்டு முன்னால் போராட்டம் நடத்தினார்கள்.

அமிதாப்பச்சன் வீட்டு முன் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறித்து அறிந்ததும் பொலிஸார் விரைந்து வந்தனர். அவர்கள் மாணவர்களை வலுக்கட்டாயமாக அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள். அவர்களில் 22 பேரை பொலிஸார் பிடித்துச் சென்று விசாரணைக்கு பிறகு விடுத்தனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. (உ)

# எடியூரப்பா - சித்தராமையா ஒரே மேடையில் சந்திப்பு

பெங்களூரு,செப்.21

கர்நாடகத்தில் எதிரெதிர் துருவங்களாக உள்ள எடியூரப்பாவும், சித்தராமையாவும் ஒரே மேடையில் சந்தித்துப் பேசினர். இது கர்நாடக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கர்நாடக தொழில்துறை மற்றும் தலித் தொழில் முனைவோர் சங்கம் சார்பில் அரசு வழங்கும் சலுகைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பெங்களூரு வசந்த நகரில் உள்ள அம்பேத்கர் பவனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் முதலமைச்சர் எடியூரப்பா கலந்து கொண்டு, நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்துப் பேசினார். அப்போது முன்னாள் முதலமைச்சர் சித்தராமையாவும் நிகழ்ச்சிக்கு வந்தார்.

அப்போது மேடையில் இருக்கையில் அமர்ந்திருந்த எடியூரப்பா எழுந்து நின்று, சித்தராமையாவை வரவேற்று இருக்கையில் அமருமாறு கூறினார். சித்தராமையா ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு எடியூரப்பா நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து வருகிறார். மேலும் பல வேறு திட்ட பணிகளில் முறைகேடு நடைபெற்று உள்ளதாகக் கூறி விசாரணைக்கும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அதே நேரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவில்லை என்று கூறி முன்னாள் முதலமைச்சர் சித்தராமையா, எடியூரப்பாவை கடுமையாகக் குறை கூறி வருகிறார். சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் தான்வித்தான சவுதாவில் தர்ணா போராட்டம் நடத்தினர்.

இவ்வாறு கர்நாடக அரசியலில் எதிரெதிர் துருவங்களாக இருக்கும் எடியூரப்பாவும், சித்தராமையாவும் நேற்றுமுன்தினம் ஒரே மேடையில் தோன்றியமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. மேலும் இது கர்நாடக அரசியலில் சிறிது பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி அரசியல் விமர்சகர்கள், தங்களுக்கு உரிய பாணியில் கருத்துகளைக் கூறி வருகிறார்கள்.

# ஒரே வாரத்திற்குள் இரு முறை சந்தித்து பேசும் மோடி - டிரம்ப்

அமெரிக்க நகரங்களில் மோடியும், டிரம்பும் ஒரே வாரத்தில் 2 முறை சந்தித்து பேச்சு நடத்த இருக்கின்றமை உலகநாடுகள் இடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



நியூயோர்க் நகரில் ஐ.நா. சபையின் பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி இன்று (21) தொடங்கி 27 ஆம் திகதி வரை அமெரிக்காவில் ஒரு வாரம் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

22 ஆம் திகதி ஹூஸ்டன் நகரில் 'நலமா மோடி?' நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மோடி 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க வாழ் இந்தியர்கள் மத்தியில் பேசுகிறார். இந்த நிகழ்ச்சியில் அதிபர் டிரம்பும் கலந்து கொள்கிறார். அப்போது இரு தலைவர்களும் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து பேசுகிறார்கள்.

மோடி இரண்டாவது முறையாக பிரதமரான பின் டிரம்புடன் நடத்துகிற 3 ஆவது சந்திப்பு ஆகும் இது. மேலும் இரு தலைவர்களும் ஒரே மேடையில் தோன்றப் போகின்றமை இதுவே முதல் முறை என்பதால் அமெரிக்காவில் அது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையில் ஹூஸ்டன் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்கும் போதும் பிரதமர் மோடியும், அதிபர் டிரம்பும் ஒரே வாரத்தில் 2 ஆவது முறையாக சந்தித்துப் பேச உள்ளனர்.

இந்தச் சந்திப்பு மோடி, டிரம்புடன் நடத்துகிற 4 ஆவது சந்திப்பாக அமையப் போகிறது. 4 மாதத்தில் 4 முறை இரு தலைவர்களும் சந்திப்பது உலக அரங்கில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# மத்திய அமைச்சர் மீது மாணவர்கள் தாக்குதல்

கொல்கத்தாவின் ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில் உரை நிகழ்த்த வந்த பா.ஜ.கவின் மத்திய அமைச்சர் பாபுல் சுப்ரியோவை மாணவர்கள் முற்றுகையிட்டு தாக்கியமையால் அங்கு பெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.



அகில பாரதிய விஷ்வ பரிஷ் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த பாபுல் சுப்ரியோவை மாணவர்கள் கன்னத்தில் அறைந்து, இழுத்துச் சென்று உதைத்தனர். பாபுல் சுப்ரியோவின் பாதுகாவலர்கள் மனித வளையம் அமைத்து அவரைப் பாதுகாக்க முயன்றனர்.

பலமணி நேரம் மாணவர்கள் அவரை வெளியேற விடாமல் வழி மறித்தும் நின்றனர். இதனைக் கண்ட மேற்கு வங்க ஆளுநர் ஜக்தீப் தன்கர், மிகப்பெரிய காவல்படையை அழைத்து, அவர்களின் உதவியுடன் கூட்டத்தில் சிக்கிய பாபுல் சுப்ரியோவை மீட்டார்.

பின்னர் ஆளுநர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில், சட்ட விரோதமாக மாணவர்கள் நடந்து கொண்டனர் என்றும், பாபுல் சுப்ரியோவுக்கு நேரிட்ட அவமதிப்பு கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைக் கண்டித்து பா.ஜ.கவினர் கண்டனப் பேரணி நடத்தினர்.

காலைக்கதிர் Kalaikathir



# எண்ணெய் உற்பத்தி ஆலைத் தாக்குதலின் பின்னணியில் ஈரான் இருப்பது நிரூபணம்!

## குற்றம் சுமத்துகின்றது சவூதி அரேபியா



ரியாத்,செப்.21

சவூதி அரேபியாவின் இரு எண்ணெய் ஆலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு, ஈரான் ஆயுதங்களை வழங்கி உதவியதாக சவூதி அரேபியப் பாதுகாப்புத்துறை குற்றம் சாட்டி உள்ளது.

சவூதி அரேபியாவில் அரம்கோ நிறுவனத்துக்கு சொந்தமான மிகப்பெரிய மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மீது கடந்த 14ஆம் திகதி ஆளில்லா விமானங்கள் மூலம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதனால் அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டு, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்ந்தது.

இந்தநிலையில் இந்த தாக்குதல்களை நடத்தத் தீவிரவாதிகளுக்கு ஈரான் தான் ஆயுதங்களையும், ஆளில்லா விமானங்களையும் வழங்கி உதவியதாக சவூதி அரேபியா குற்றம் சாட்டியுள்ளது.

ரியாத் நகரில் செய்தியாளர்களைச் சந்தித்த அந்நாட்டின் பாதுக்காப்புத்துறை செய்தித் தொடர்பாளர், துர்க்கி அல்மால்கி தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் அதிக துல்லியம் வாய்ந்த ஏவுகணைகளின் சிதைந்த பாகங்களை வெளியிட்டார்.

இந்த ஏவுகணைகளும், ஆளில்லா விமானங்களும் நாட்டின் வடக்கு திசையிலிருந்து ஏவப்பட்டன. அவற்றை ஈரான்தான் வழங்கியது என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் உறுதியாகி உள்ளது. ஏமனில் இருந்து எந்த வகையிலும் தாக்குதல்கள் நடத்தப்படவில்லை.மேலும் 18 ஆளில்லா விமானங்களும், 7 அதி துல்லிய ஏவுகணைகளும் எண்ணெய் ஆலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டன.

இருப்பினும், பத்திரிகையாளர்கள் கேட்டபோது அல் மால்கி ஈரானை நேரடியாக குற்றம்சாட்டவில்லை. குற்றவாளிகள் உறுதியாக அடையாளம் காணப்பட்டவுடன் அது குறித்து வெளியிடப்படும் என்று அவர் கூறினார்.

இது குறித்து ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானியின் ஆலோசகர் ஹெசமோடின் ஆஷ்னா தனது டுவிட்டரில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் எங்கிருந்து தயாரிக்கப்பட்டன அல்லது ஏவப்பட்டன என்பது பற்றி சவூதி அரேபியாவுக்கு எதுவும் தெரியாது என்பதை பத்திரிகையாளர் சந்திப்பு நிரூபித்தது, மேலும் நாட்டின் பாதுகாப்பு அமைப்பு அவற்றை ஏன் தடுக்கத் தவறியது என்பதை விளக்கத் தவறிவிட்டது எனக் கூறி உள்ளார்.

# இஸ்ரேலில் திரும்பவும் தொங்கு நாடாளுமன்றம்

## மீண்டும் பொதுத் தேர்தலுக்குப் போகும் கட்டாயம்

இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத தொங்கு நாடாளுமன்றம் வந்துள்ள நிலையில், எதிர்க்கட்சியான நீல வெள்ளைக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டமிட்டு வருகிறார்.



120 உறுப்பினர்கள் கொண்ட இஸ்ரேல் நாடாளு மன்றத்துக்கு கடந்த செவ்வாய்க் கிழமை தேர்தல் நடந்தது. 95 சதவீத வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான லிக்குட் கட்சி 32 இடங்களைப் பெற்றுப் பின் தங்கி இருக்கிறது.

எதிர்க்கட்சியான பென்னி காட்ஸ் தலைமையி லான நீல வெள்ளைக் கட்சி 33 இடங்களுடன் முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது இடத்தில் அரபு இஸ்ரேல் கட்சிகளின் கூட்டமைப்பான ஜொயின்ட் லிஸ்ட் கட்சி 12 இடங்களுடன் இருக்கிறது. பழைமைவாத கட்சியான ஷொஸ்க்குக்கு 9 இடங்கள் கிடைத்துள்ளன.

ஆட்சி அமைப்பதற்கு 61 உறுப்பினர்கள் ஆதரவு தேவை என்ற நிலையில், எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்காத சூழலில், பிரதான எதிர்க்கட்சியான நீல வெள்ளைக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான பென்னி கான்ட்ஸுக்கு பிரதமர் நெதன்யாகு கூட்டணி ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் நெதன்யாகு நிருபர்களிடம் கூறுகையில், எதிர்க் கட்சித்தலைவர் பென்னி கான்ட்ஸை விரைவில் சந்தித்து, அவருடன் பேசி கூட்டணி ஆட்சி அமைக்க முயற்சிக்கப் போகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று 5 ஆவது முறையாக நெதன்யாகு பிரதமரானார்.

ஆனால், கூட்டணியில் இருந்த ஒரு கட்சி வெளியேறியதால், மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தச் சூழலில், பிரதான எதிர்க்கட்சியான நீல வெள்ளைக் கட்சி நிச்சயம் பிரதமர் நெதன்யாகுவுடன் கூட்டணி ஆட்சிக்கு ஒத்துழைக்காது என்றும், ஆதலால் 3 ஆவது முறையாக நாடாளுமன்றத் தேர்தலை நாடு சந்திக்க வேண்டி இருக்கும் என்றும் இஸ்ரேலிய ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

# வொஷிங்டனில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

வொஷிங்டன்,செப்.21

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் சாலையில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது மர்மநபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்.

வொஷிங்டனில் மிகவும் பரபரப்பான சாலை கொலம்பியா வீதி. வெள்ளை மாளிகையில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்து சென்றவர்கள் மீது திடீரென மர்மநபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தி உள்ளார். இதனால் சாலையில் சென்றவர்கள் சிதறி ஓடினர்.இந்தத் துப்பாக்கிச் சூட்டில் பலர் காயமடைந்திருக்கின்றனர் என உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியானது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.



தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார் எனவும், 5 பேருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கனில் தீவிரவாதிகள் மீதான அமெ. தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 30 பேர் சாவு; 45 பேர் காயம்



காபூல்,செப்.21

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட அமெரிக்காவின் வான் வெளித் தாக்குதல் சம்பவத்தில் எதிர்பாராதவிதமாக அப்பாவி பொதுமக்கள் 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அந்நாட்டு அரசுடன் இணைந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும், இந்த தாக்குதலில் அப்பாவி பொது மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதையடுத்து, போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அமெரிக்கா தலைமையில் தலிபான் தீவிரவாதிகளுடன் அமைதி பேச்சு நடத்தப்பட்டு வந்தது. ஆனால், தலிபான் உடனான பேச்சுத் தோல்வியடைந்து விட்டதாக அதிபர் டிரம்ப் சமீபத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், அந்நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள நங்ஹர்கர் மாகாணத்துக்குட்பட்ட ஹயானி மாவட்டத்தில் அமெரிக்கப்படைகள் ஆளில்லா விமானங்கள் மூலம் வான்வழித் தாக்குதல்களை நடத்தின.

தீவிரவாதிகளைக் குறி வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்தில் எதிர்பாராதவிதமாக அப்பாவி பொதுமக்கள் 30 பேர் உயிரிழந்தனர். மேலும், 45 இற்கும் அதிகமான பொதுமக்கள் இத் தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

(உ)

காலைக்கதிர் Kalaikathir



# மசகு எண்ணெயை பாதாளத்தில் சேமித்து வைத்துள்ளது அமெ.

## நெருக்கடிநிலை ஏற்பட்டால் சமாளிக்க

அமெரிக்காவின் லூசியானா மற்றும் டெக்சாஸ் மாகாணங்களில் பாதாள சுரங்கங்களில் பெருமளவு மசகு எண்ணெய் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் முக்கிய மசகுஎண்ணெய்வளாகத்தின்மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து, அமெரிக்காவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பெருமளவு இருப்பில் இருந்து மசகுஎண்ணெயை வெளியில் எடுப்பது பற்றி அமெரிக்க அதிகாரிகள் பேசி வருகின்றனர்.

மசகுஎண்ணெய்விலைஉயர்ந்த போது,"சந்தையில்போதிய அளவுக்கு எண்ணெய் கிடைக்கச்செய்வதற்கு" இந்த மசகு எண்ணெயைப் பயன்படுத்தலாம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ட்விட்டரில் கூறியிருந்தார்.

டெக்சாஸ் மற்றும் லூசியானாவில் பாதாள குகைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள 640 மில்லியனுக்கும் அதிகமான பரல்கள் அளவிலான மசகு எண்ணெய் பற்றித்தான் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த முக்கியமான கையிருப்பை வைத்துக்கொள்ளும் வழக்கம் 1970 களில் இருந்தே அமுல் செய்யப்பட்டு வருகிறது.

சர்வதேச எரிசக்தி முகமையின் உறுப்பு நாடுகள் அனைத்துமே 90 நாள்களின் தேவைக்கு இணையான அளவுக்கு கையிருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அமெரிக்காவின் கையிருப்புதான் உலகில் அதிகபட்ச அளவாக உள்ளது.

### அது ஏன் உருவாக்கப்பட்டது?

1970களின் தொடக்கத்தில் மத்திய கிழக்கு நாடுகள் மசகு எண்ணெயை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய மறுத்தபோது உலகம் முழுக்க மசகு எண்ணெய் விலை உயர்ந்ததை அடுத்து, கையிருப்பு வைத்துக் கொள்வது பற்றிய சிந்தனை அமெரிக்க அரசியல்வாதிகள் மத்தியில் உருவானது.

1973 இல் அரபு – இஸ்ரேல் போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்ததால், ஈராக், குவைத், கத்தார் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்ய மறுத்தன.



> அமெரிக்க நாடாளுமன்றம் 1975 இல் எரிசக்திக் கொள்கை மற்றும் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கியது. இன்னொரு முறை பெரிய அளவில் மசகு எண்ணெய் கிடைப்பது பாதிக்கப்பட்டால், நிலைமையைக் கையாள்வதற்காக முக்கிய பெற்றோலிய கையிருப்பு வசதியை உருவாக்கியது. கையிருப்பு என்பது என்ன? இப்போது நான்கு இடங்களில் மசகு எண்ணெய் சேமிக்கப்படுகிறது. டெக்சாஸில் ப்ரீபோர்ட் மற்றும் வின்னி, லூசியானாவில் சார்ள்ஸ் ஏரிக்கு வெளியிலும், பேட்டன் ரூஜ்ஜிலும் சேமிக்கப்படுகிறது.

## 1975 இல் எரிசக்தி கொள்கை

அந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் மூன்று வாரங்கள் மட்டுமே அந்தப் போர் நீடித்தது. ஆனால் மசகு எண்ணெய் வழங்குவதற்கான தடை மார்ச் 1974 வரையில் நீடித்தது. அதனால் உலகெங்கும் மசகு எண்ணெய் விலை 3 டொலர் என்ற அளவில் இருந்து 12 டொலர் என நான்கு மடங்கு அதிகரித்தது.

பாதிக்கப்பட்ட நாடுகளில் பெற்றோல் நிலையங்களுக்கு எதிரே காத்திருக்கும் கார்களின் புகைப்படங்கள், நெருக்கடியை வெளிக்காட்டுவதாக இருந்தன.

அமெரிக்க நாடாளுமன்றம் 1975 இல் எரிசக்திக் கொள்கை மற்றும் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கியது. இன்னொரு முறை பெரிய அளவில் மசகு எண்ணெய் கிடைப்பது பாதிக்கப்பட்டால், நிலைமையைக் கையாள்வதற்காக முக்கிய பெற்றோலிய கையிருப்பு வசதியை உருவாக்கியது.

### கையிருப்பு என்பது என்ன?

இப்போது நான்கு இடங்களில் மசகு எண் ணெய் சேமிக்கப்படுகிறது. டெக்சாஸில் ப்ரீபோர்ட் மற்றும் வின்னி, லூசியானா வில் சார்ள்ஸ் ஏரிக்கு வெளியிலும், பேட்டன் ரூஜ்ஜிலும் சேமிக்கப்படுகிறது.

ஒவ்வொரு இடத்திலும் செயற்கையாக உரு வாக்கப்பட்ட, உள்புறமாக இரசா யன உப்பு பூசப்பட்ட பாதாள குகை கள் ஒரு கிலோ மீற்றர் வரை (3,300 அடி) உள்ளன. அவற்றில் மசகு எண்ணெய் சேமிக்கப்பட்டுள்ளது. பூமிக்கு மேலே டேங்குகளில் வைப் பதைவிட இதற்கான செலவு குறைவு, பாதுகாப்பானதும் கூட. உப்பின் இரசாயனக் கலப்புத் தன்மையும், புவியியல் அழுத்தமும் மசகு எண்ணெய் கசியாமல் தடுக்கின்றன.

ப்ரீபோர்ட் அருகே பிரியன் மவுண்ட் என்ற இடத்தில் உள்ள மிகப் பெரிய சேமிப்பு வளாகத்தில் 254 மில்லியன் பரல்கள் அளவிற்கு மசகு எண்ணெய் சேமிக்கும் வசதி உள்ளது.

செப்ரெம்பர் 13ஆம் திகதி 644.8 மில்லியன் பரல்கள் அளவுக்கு மசகு எண்ணெய் இந்த பாதாள குகைகளில் கையிருப்பு இருந்தது என்று இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க எரிசக்தி தகவல் நிர்வாகத்துறையின் தகவலின்படி, 2018ல் அமெரிக்கர்கள் சராசரியாக ஒரு நாளுக்கு 20.5 மில்லியன் பேரல்கள் அளவுக்கு மசகு எண்ணெய் பயன்படுத்தியுள்ளனர். அதாவது கையிருப்பை வைத்து நாட்டில் 31 நாள்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

### அது எப்படி செயல்படுகிறது?

அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ஜெரால்ட் போர்ட் கையெழுத்திட்ட 1975ஆம் ஆண்டு சட்டத்தின்படி, "எரிபொருள் விநியோகத்தில் கடும் தட்டுப்பாடு" ஏற்பட்டால் கையிருப்பு எண்ணெயைப் பயன்படுத்த அதிபர் மட்டுமே அனுமதி அளிக்க முடியும்.

நடைமுறை சிக்கல்கள் என்பது குகைகளில் இருந்து ஒவ்வொரு நாளும் குறைந்த அளவுக்கு மட்டுமே மசகுஎண்ணெயை வெளியில் எடுக்க முடியும். அதாவது அதிபரின் அனுமதி இருந்தாலும், அது சந்தைக்கு வந்து சேர இரண்டு வாரங்கள் ஆகும்.

சொல்லப்போனால், இந்த மசகு எண்ணெய் அனைத்தும் சுத்திகரிப்பு செய்யப்படாதவை. கார்கள், கப்பல்கள், விமானங்களில் பயன்படுத்துவதற்கு முன்னதாக இதைச் சுத்திகரிப்பு செய்தாக வேண்டும்.

சவுதி அரேபியாவில் தாக்குதல்களைத் தொடர்ந்து கையிருப்பில் இருந்து எடுப்பது பற்றிய பேச்சுக்கான தேவை இன்னும் வரவில்லை என்று திங்கட்கிழமை சி.என்.பி.சி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அமெரிக்க எரிபொருள் துறை செயலாளர் ரிக் பெர்ரி கூறியுள்ளார்.

கடைசியாக 2011 இல் இது பயன்படுத்தப்பட்டது. அரபு நாடுகளில் அரசுகளுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமானபோது, எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கலைக் குறைக்க இந்த இடங்களில் இருந்து மொத்தம் 60 மில்லியன் பரல்கள் அளவிற்கு மசகு எண்ணெயை எடுக்க வேண்டிய கட்டாயம் சர்வதேச எரிபொருள் ஏஜென்சி உறுப்பு நாடுகளுக்கு ஏற்பட்டது.

மெக்சிக்கோ வளைகுடா அருகே உப்பு பாதாள குகைகளில் அமெரிக்கா பல மில்லியன் பரல்கள் அளவிற்கு மசகு எண்ணெயைச் சேமித்து வைத்துள்ளது.

இருந்தபோதிலும், சில சமயங்களில் பெருமளவு அமெரிக்கா விற்பனையும் செய்துள்ளது. 1991ல் வளைகுடா போரின்போது இந்தக் கையிருப்பைப் பயன்படுத்த அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஒப்புதல் அளித்தார். கத்ரீனா புயல் தாக்கிய போது 11 மில்லியன் பரல்கள் மசகு எண்ணெயை எடுக்க அவருடைய மகன் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் அனுமதி அளித்தார்.

அமெரிக்க எரிசக்தி உற்பத்தி வேகமாக வளர்ந்து வரும் நிலையில், இவ்வளவு அதிகமாக கையிருப்பு வைப்பது பற்றி கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதை முற்றிலும் கைவிட்டு விடலாம் என்று வொஷிங்டனில் சிலர் பரிந்துரை செய்கின்றனர்.

பெற்றோல் நிலையங்களில் அமெரிக்க மக்களுக்கு விலையைக் குறைக்க இது உதவும் என்று 2014 இல் அரசு பொறுப்புடைமை அலுவலகம் கூறியுள்ளது. 2017 இல் அரசின் நிதிப்பற்றாக் குறையை சமாளிக்க, கையிருப்பில் பாதியை விற்பது பற்றி டிரம்ப் அரசு யோசனையை முன்வைத்தது.

1997 இல் பற்றாக்குறையைக் குறைக்கும் நடவடிக்கையாக 28 மில்லியன் பரல்களை அதிபர் பில் கிளின்டன் அரசு விற்பனை செய்தது. *





# பணம் சம்பாதிக்கும் அரசியல் நீடித்தால் மக்கள் கிளர்ந்தெழும் காலம் வரலாம்...!

## நிலைமையை மாற்றியமைக்க

## படித்த, பண்பான இளைஞர்களே வாருங்கள் அரசியலுக்கு...!!

வாரத்துக்கொரு கேள்வி வரிசையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இவ்வாற கேள்விக்கு பதிலளித்துள்ளார்.

**கேள்வி:-** எழுக தமிழ் பேரணியை வெற்றிகரமாக முடித்து விட்டீர்கள். உங்கள் அடுத்த இலக்கு என்ன?

**பதில்:-** எனக்கு சார்பானவர் கேட்கும் கேள்வியா அல்லது ஒரு எதிர்மறை விமர்சகர் கேட்கும் கேள்வியா என்று எனக்குப் புரியவில்லை. என்றாலும் பதில் தர எத்தனிக்கின்றேன். அண்மைய எழுக தமிழ் வெற்றி பெற்றது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. எம்முடன் நகமும் சதையுமாகச் சேர்ந்திருந்து தற்போது போர்க்கொடி தூக்குவோர் கூட மனதின் அந்தரங்கத்தில் இதனை ஏற்றுக் கொள்வர்.

ஆனால் வெற்றி என்பது எனது தனிப்பட்ட சொத்து அல்ல. எனது கட்சியின் வெற்றியுமல்ல. எமது கட்சியினர் பலர், எமது நலன் விரும்பிகள் பலர் இரவு பகல் பார்க்காது மக்களோடு மக்களாய் சேர்ந்து நின்று உழைத்தமை உண்மைதான். அவ்வாறே நேசக்கட்சிகளின் உறுப்பினர்களும் செய்தார்கள். இவர்கள் யாவரும் தமிழ் மக்கள் பேரவை சார்பிலேயே தமது உதவிகளை வழங்கினார்கள். தமிழ் மக்கள் பேரவையில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒருமித்து செயற்பட்டமையால் ஏற்பட்டதே இந்த வெற்றி.

வணிகர் சங்கங்கள், வியாபாரிகள் எனப் பலரும் தமது நட்டத்திலேயே எமக்கு வெற்றியை வழங்கினார்கள். அவர்கள் சேவை மகத்தானது. கிழக்கில் இருந்தும் வன்னியில் இருந்தும் தீவுப் புறங்களில் இருந்தும் எம்மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து யாழ். குடாநாட்டு மக்களுடன் சேர்ந்தே எழுக தமிழை வெற்றியடையச் செய்தார்கள்.

எனது பேச்சு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருந்ததென்று சொன்னால் அதுவும் கூட்டு முயற்சியே. ஆங்கில மொழிபெயர்ப்பு மட்டும் முழுமையாக என்னுடையது என்று கூறலாம். ஆகவே வெற்றி என்பது எழுக தமிழ் பேரணியில் பங்குபற்றிய ஒவ்வொருவருக்கும் உரியதொன்றே. தமிழ் மக்கள் பேரவையின் மற்றுமொரு வெற்றியே. என்னைத் தனிப்பட்டுக் குறிப்பிட்டு எம்முள் வேற்றுமையை ஏற்படுத்தாதீர்கள்.

என்றாலும் எழுக தமிழ் எமக்குப் பாடங்கள் பல வற்றைத் தந்துதவியுள்ளன. உதாரணத்திற்கு வார இறுதியில்வைக்க வேண்டிய பேரணியைவாரநாளான திங்கட்கிழமைக்கு மாற்றியமை பிழை என்றே சொல்லத் தோன்றுகின்றது. பல்கலைக்கழக மாணவ, மாணவியர் வார நாள்களிலேயே வருகை தருவார்கள் எனப்பட்டது. ஆனால் அங்கு நடைபெறும் வேலை நிறுத்தம் பல்கலைக்கழக மாணவ, மாணவியரின் வருகையைத் தடைப்படுத்தியமை, எம்மால் ஏற்கனவே கணக்கில் எடுக்கப்பட முடியாது போய்விட்டது.

வாரநாள் பேரணி ஆசிரிய ஆசிரியைகள், சிரேஷ்ட மாணவர்கள், அரசாங்க அலுவர்கள் மேலும் மற்றோர் பலரை வரவிடாமல் தடுத்துவிட்டது. வார இறுதி நாள்கள் என்றால் அவர்கள் யாவரும் பங்குபற்ற இடமளித்திருக்கும். எனினும் எமது வார நாள் பேரணி வேறொரு சமூக அலகை முன்னுக்குக் கொண்டு வந்தது. தமது நட்டத்தைப் பாராது கடைகளை இழுத்து மூடிய எமது வணிகப் பெருமக்களையே நான் குறிப்பிடுகின்றேன். மேலும் ஒரு வேலைநாளில் தெருக்கள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. இ.போ.ச. வேலை நிறுத்தமும் அதற்கொரு காரணம். எமது மக்கள் பலர் கிட்டிய இடங்களில் இருந்து வராமைக்கு அதுவும் ஒரு காரணம்.

அடுத்த இலக்கு பற்றிக் கேட்டிருக்கின்றார் கேள்வியாளர். எமது அரசியலின் போக்கில் மாற்றம் ஏற்பட நாம் உழைக்க வேண்டும். படித்த, பண்புள்ள, ஊழலற்ற, நடுத்தர வயது மக்களை / இளைஞர், யுவதிகளை அரசியலில் நாம் சேர்க்க வேண்டும். அவர்கள் பலதும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும். எதைப் பற்றியுந் சொல்லித் தெரிந்து கொள்ளும் பக்குவம் பெற்றிருக்க வேண்டும். மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழர்களின் வருங்காலம் பற்றியும் இந்நாட்டின் எதிர்காலம் பற்றியும் வலுவான சிரத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும். கொள்கைகளில் பற்றுறுதி கொண்டவர்களாக இருக்க வேண்டும். பொது விடயங்கள் சம்பந்தமான தமது அக்கறையின்மைக்கு நல்லவர்கள் செலுத்தும் விலை துஷ்டர்களால் ஆளப்படுவதே என்று கூறினார் ப்ளேடோ என்ற கிரேக்க தத்துவ ஞானி.

இதுவரை காலமும் அக்கறையின்றி எமது நன்மக்கள் இருந்த படியால்தான் துஷ்டர்கள் அரசியலில் இடம்பிடித்துள்ளார்கள். இனியாவது அந்த நிலையை மாற்ற எம் மக்கள் முன்வர வேண்டும். என்னுடைய சட்டத்தரணி சிங்கள நண்பர் ஒருவர் 1977ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றியீட்டி பிரதியமைச்சர் பதவியும் பெற்றார். அவரை பாராட்டி விட்டு அடுத்து என்ன செய்யப் போகின்றாய் என்று அவரிடம் கேட்டதற்கு அவர் சிங்களத்தில் என்ன ஓய்! நான் தேர்தலுக்கு செலவழித்த பணம் முழுவதையும் திரும்பப்பெற வேண்டாமா? என்றார். அப்படியே அவர் செலவழித்த பணத்தையும் விட பல மடங்கு பணம் அரசியலில் சம்பாதித்தார். கடைசியில் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டார். தேர்தல் என்பது ஒரு கேடு விளைவிக்கின்ற வட்டமாக மாறிவிட்டது. தேர்தலுக்கு செலவு, செலவை ஈடுசெய்ய பதவியில் ஊழல், ஊழல் நிகழ்த்தவே தேர்தல் என்று ஆகிவிட்டது.

தந்தை செல்வா, திரு.வன்னியசிங்கம் போன்றவர்கள் தம் கைவசம் இருந்தவற்றை மக்களுக்குச் சேவை செய்யப் புகுந்து இழந்தார்களே ஒழிய அரசியல் அவர்களைப் பணக்காரர்கள் ஆக்கவில்லை. எமது அரசியல் என்பது பணம் சம்பாதிக்க ஒரு சிறந்த வழியாக மாறிவிட்டது. இன்றைய அரசியல் நிலை தொடர்ந்தால் மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து வன்முறைகளில் ஈடுபடக்கூடிய காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆகவேதான் படித்த, பண்பான, ஊழலற்ற இளைஞர்கள் நடுத்தர வயதினர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்று கூறுகின்றேன். அரசியலுக்கு அறிவிலும் பார்க்க அன்பே மிக்க அவசியம் என்பது எனது கருத்து. மக்கள் மீது அன்பிருந்தால் அரசியல்வாதிகள் சாதிப்பார்கள். இல்லையென்றால் சம்பாதிப்பார்கள் ஆனால் சாதிக்க மாட்டார்கள். ஆகவே எனது இலக்கு பொறுப்பான தமிழ் இளைஞர்களை/ நடுத்தர வயதினர்களை, பணியனுபவம் பெற்றவர்களை மாவட்டம் தோறும் கண்டுபிடிப்பதே. தேர்தல்கள் வெல்வதிலும் பார்க்க எமது அரசியலுக்கு ஏற்ற பற்றுறுதியுள்ள வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பது அவசியம். தோதான வேட்பாளர்கள் கிடைத்தால்தான் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கு ஒரு மொழியே தெரியும். பிறமொழி பேசுபவர்களுடன் அவர்கள் எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்வதில்லை. மனம் விட்டுப் பேசுவதில்லை. எமது குறைகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. இவ்வாறு தனியறைகளில் வசித்துக் கொண்டு நாடாளுமன்றம் செல்லும் நிலை மாற வேண்டும். சரிசமனாக எவருடனும் எதிர்த்து நின்று பேசுந் தன்னம்பிக்கை எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குவர வேண்டும். ஆகவே படித்த, பண்புள்ள, ஊழலற்ற இளைஞர்களை/நடுத்தர வயதினரை எம்முடன் சேருமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். நிச்சயம் அவர்கள் வந்து எம்முடன் சேர்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. *

> அரசியலுக்கு அறிவிலும் பார்க்க அன்பே மிக்க அவசியம் என்பது எனது கருத்து. மக்கள் மீது அன்பிருந்தால் அரசியல்வாதிகள் சாதிப்பார்கள். இல்லையென்றால் சம்பாதிப்பார்கள் ஆனால் சாதிக்க மாட்டார்கள். ஆகவே எனது இலக்கு பொறுப்பான தமிழ் இளைஞர்களை / நடுத்தர வயதினர்களை, பணியனுபவம் பெற்றவர்களை மாவட்டம் தோறும் கண்டு பிடிப்பதே.

# அவன்கார்ட் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 21

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான அவன்கார்ட் வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவன்கார்ட் வழக்கு விசாரணை நேற்றுக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துகொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அவன்கார்ட் வழக்கில் இருந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய மற்றும் 7 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

ஆனாலும் அது தொடர்பான ஆவணங்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. அதனால் அந்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 23 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டோனி ஓய்வு பெறும் நேரம்

இந்திய நட்சத்திர வீரர் டோனி ஓய்வு பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது என இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் வலியுறுத்தியுள்ளார்.




உலகக் கிண்ண அரையிறுதியில் கடைசியாக விளையாடிய டோனி, அதை தொடர்ந்து நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாபிரிக்கா உடனான தொடரில் விளையாடவில்லை. இது ரசிகர்களிடையே மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமின்றி நாளுக்கு நாள் டோனி ஓய்வு குறித்த வதந்திகள் தீயாக பரவி வருகின்றன. ஆனால், இன்று வரை டோனி தரப்பில் ஓய்வு குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

பலர் டோனி ஓய்வு குறித்து கருத்து தெரிவித்து வரும் நிலையில் இந்திய முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கரும் கூறியுள்ளார். டோனியின் மனதில் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. இந்திய கிரிக்கெட்டுடன் தனது எதிர்காலம் என்ன என்பதை அவர் மட்டுமே தெளிவுபடுத்த முடியும்.

ஆனால், இப்போது அவருக்கு 38 வயதாகிறது, அதனால், டோனி இல்லாமல் இந்தியா அணி எதிர்காலத்தை நோக்கி நகர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் அடுத்த டி – 20 உலகக் கிண்ணம் வரும்போது அவருக்கு 39 வயது இருக்கும் என்று சுனில் கவாஸ்கர் குறிப்பிட்டார்.

இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலத்திற்கான டோனியின் செயற்பாட்டை மேலும் கருத்தில் கொள்ளாமல், இரண்டு முறை உலகக் கோப்பை வென்றவர் என்ற கண்ணியத்துடன் கிரிக்கெட்டிலிருந்து விடைபெற வேண்டிய நேரம் இது.

அவர் மீது இருக்கும் மதிப்பு எப்போதுமே சிறப்பாகவே இருக்கும். அவர் அடித்த ஓட்டங்கள் அல்லது ஸ்டம்பிங் மட்டுமல்ல. அவர் களத்தில் ஒட்டுமொத்தமாக இருப்பது அணித் தலைவருக்கு நிம்மதியாக இருக்கும், ஏனெனில் அணித்தலைவர் தான் அதன் பலனைப் பெறுவார். எனவே அது அணிக்கு ஒரு கூடுதலான பெரிய பலம்.

ஆனால், டோனி கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுக்கும் நேரம் வந்துவிட்டது என்று நான் நம்புகிறேன் என்று கவாஸ்கர் கூறினார்.

எல்லோருக்கும் அடுத்த கட்ட வாழ்க்கை இருக்கிறது, பலர் நம்புவதை போல நானும் டோனியை மிகுந்த மரியாதையுடன் நம்புகிறேன், மில்லியன் கணக்கான மற்றவர்களைப் போல நானும் ஒரு ரசிகன். அவர் அணியில் இருந்து வெளியே தள்ளப்படாமல், அவராகவே ஓய்வு பெற வேண்டும் என்று நான் நம்புகிறேன் எனக் கூறியுள்ளார்.




# தனஞ்சயவுக்கு மீண்டும் தடை!

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரர் அகில தனஞ்சயவுக்கு, பந்துவீசுவதற்கு 12 மாதங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் காலியில் நடைபெற்ற நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, அகில தனஞ்சயவின் பந்துவீச்சுப் பாணியில் சந்தேகம் நிலவுவதாக நடுவர்கள் குற்றம் சுமத்தினர்.

இதனைத் தொடர்ந்து, அகில தனஞ்சயவுக்கு 14 நாட்களுக்குள் பந்துவீச்சு நிலைகள் குறித்து ஆய்வு செய்யவேண்டுமென இலங்கை கிரிக்கெட் சபைக்கு சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டது.

இதனையடுத்து, அகில தனஞ்சய பந்துவீச்சுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதில் அவர் சர்வதேச கிரிக்கெட் விதிகளுக்கு மாறாக பந்து வீசுவது கண்டறியப்பட்டது. இந்த நிலையில் அவருக்கு ஒருவருடம் பந்துவீசுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. இது தொடர்பாக அகில தனஞ்சயவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போட்டியில் தான், நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சனின் பந்து வீச்சு முறைமையிலும் சந்தேகம் இருப்பதாகக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

25 வயதான இடது கை சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சய, இதற்கு முன்னதாக கடந்த ஆண்டு காலி மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில், அனுமதிக்கப்பட்ட 15 பாகை கோண அளவினை விட நீண்ட கோணத்தில் பந்துவீசுவது கண்டறியப்பட்டது.

இதனால், அவருக்குச் சர்வதேசப் போட்டிகளில் பந்துவீச தடை விதிக்கப்பட்டது. இதன் பிறகு ஆஸ்திரேலியாவில் அவரின் பந்து வீச்சு முறைமை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

பின்னர், அவர் தனது பந்து வீச்சு முறைமையை மாற்றியதால், மீண்டும் சர்வதேச போட்டிகளில் பந்து வீச அனுமதிக்கப்பட்டார். தற்போது அவர் மீண்டும் ஒரு வருட தடைக்கு உள்ளாகியுள்ளார். (ஐ)

# ஸ்கொட்லாந்து அபார வெற்றி!

அயர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதும் ரி – 20 தொடர், தற்போது அயர்லாந்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

ரி – 20 உலகக்கிண்ண தகுதி சுற்றுப் போட்டிகளுக்கான முன்னோட்ட தொடராக இத்தொடர் நடைபெறுகின்றது.

இந்த முத்தரப்பு ரி – 20 தொடரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஐந்தாவது லீக் போட்டியில், நெதர் லாந்து அணியும், ஸ்கொட்லாந்து அணியும் பலப்பரீட்சை நடத்தின.

டப்ளின் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய நெதர்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக பாஸ் டி லீட் 30 ஓட்டங்களையும், டோபியாஸ் வைசி 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், ஹம்ஸா தாஹிர் 4 விக்கெட்டுகளையும், டொம் சோல் 2 விக்கெட்டுகளையும், அலஸ்டயர் எவன்ஸ், அட்ரியன் நெய்ல், ரிச்சி பெரிங்டன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 124 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, 13.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் ஸ்கொட்லாந்து அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக, ஜோர்ஜ் முன்சே 27 ஓட்டங்களையும், ரிச்சி பெரிங்டன் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நெதர்லாந்து அணியின் பந்துவீச்சில், போல் வன் மீகரன் 2 விக்கெட்டுகளையும், கிளேடொன் ப்ளொயிட் மற்றும் பீட்டர் சீலர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்த தொடரின் புள்ளி பட்டியலை பொறுத்த வரை, ஸ்கொட்லாந்து அணி 8 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

அயர்லாந்து அணி 7 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், நெதர்லாந்து அணி 6 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.



# தேர்தலைக் கண்டு அஞ்சவேயில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப். 21

தான் தேர்தலை கண்டு அஞ்சுபவன் இல்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எவ்வித அச்சமும் இல்லை. ஜனநாயகத்தை பாதுகாக்க நாம் எந்த நடவடிக்கைகளையும் எடுப்போம்.

நாம் அன்று பொறுப்பேற்கும் போது எவரும் நினைக்கவில்லை சுதந்திரமான சமூகம் ஒன்றை எம்மால் உருவாக்க முடியும் என்று.

இன்று யாரும் வெள்ளை வான்களுக்கு பயம் இல்லை. வெள்ளை வான் காலம் முடிந்து விட்டது.

நாடாளுமன்ற அமர்வுகளை பார்க்க முடியும். நாங்கள் சரியா தவறா என்று தீர்மானிக்க முடியும். யோசனைகள் வந்தால் செவிமடுக்க தயார். உடன்பாட்டுக்கு வந்ததும் செயற்படுத்தவும் தயார் – என்றார். (ஐ)

# கோட்டாபயவுக்கு எதிராக இனி வழக்குத் தொடரேன்!

## இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி பரபரப்புக் கருத்து



கொழும்பு, செப். 21

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தமை குறித்து கவலையடைகிறாள் எனவும், மீண்டும் அவருக்கு எதிராக வழக்குகளைத் தொடுக்கப் போவதில்லையெனவும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேடு கெட்ட அரசியலின் காரணமாகவே தாம் அவ்வாறு செயற்பட வேண்டி வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அவன்காட்ஸ் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியுடன் தில்ருக்ஷி உரையாடும் தொலைபேசி ஒலிப்பதிவொன்றை நிஸங்க வெளியிட்டுள்ளார். (ஐ)

# கம்பன் கோட்டத்தில் விசேட யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.21

யாழ் யோகா உலகம் அமைப்பு கம்பன் கோட்டத்தில் விசேட யோகா (Advance Yoga) பயிற்சிநெறியொன்றை ஆரம்பிக்கின்றது. இதற்கான அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யோகா வகுப்புக்கள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் மாலை 4.30 தொடக்கம் 6 மணிவரை நடைபெறும். இப்பயிற்சி நெறியில் விசேட யோகாசனங்கள் பயிற்றுவிக்கப்படுவதுடன் பிராணாயாம சூட்சுமங்கள், தியான நுட்பங்கள் என்பனவும் நுணுக்கமாகக் கற்பிக்கப்படும். யோகா போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்ட விரும்புபவர்கள், யோகாபோதனாசிரியர்களாக பணிசெய்ய ஆர்வமுள்ளவர்கள், யோகா அரங்க ஆற்றுகைகளை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு இப்பயிற்சி நெறி மிகவும் பயனுடையதாக இருக்கும்.

கம்பன் கோட்டம், நல்லூர் கந்தசுவாமி ஆலய பின் வீதியில் அமைந்துள்ளது. யோகா உலகம் அமைப்பில் விசேடயோகா பயிற்சி பெற்ற மாணவன் ம.அபிசன் கொழும்பில் இடம்பெற்ற யோகா போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சஜித்துடன் பேசும் அவசியமில்லை!

## கூறுகின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, செப். 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக் காக அமைச்சர் சஜித் பிரேமதாஸவுடன் பேசவேண்டிய தேவை தமக்குக் கிடையாதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் கூட்டணி பேச்சு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைக்கும் பேச்சு தோல்வியடைந்தால், மக்கள் விடுதலை முன்னணி, ஏனைய கட்சிகள், சிவில் அமைப்புகள் ,தொழில் சார் நிபுணர்கள் போன்றோருடன் எதிர் காலத்தில் பேச்சு நடத்த தீர்மானித்துள்ளோம்.

ஆனால் ஒருபோதும் சஜித் பிரேமதாஸவுடன் பேச்சில் ஈடுபடமாட்டோம். அதற்கான தேவையும் எமக்கு கிடையாது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமாயின் கட்டாயம் மொட்டுச் சின்னத்தை மாற்ற வேண்டும்.

மொட்டுச்சின்னத்திற்கு சு.க.ஆதரவாளர்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள் – என்றார். (ஐ)

# வத்தளை ஆடையகத்தில் தீ!

கொழும்பு, செப். 21

வத்தளையிலுள்ள பிரபல ஆடை விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தால் ஆடையகம் முற்றாக தீயில் எரிந்து நாசமானது.

தீயை அணைக்கும் முயற்சியில் ஐந்து தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறிப்படாத நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# 8 கிலோ தங்க மோசடி தொடர்பில் சுங்கப் பணிப்பாளர்கள் கைதாவர்?

கொழும்பு,செப்.21

முன்னாள் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுங்கத்தின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆகியோரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

அரசுடைமையாக்குவதற்காக சுங்கத் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருந்த 8 கிலோ தங்கத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கமைய சந்தகிரி பௌத்தவிஹாரையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அமைப்பதற்கு பயன்படுத்தியமை குறித்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளரின் ஆலோசனைக்கமைய அநுராதபுரம் சந்தகிரி விஹாரையில் 8 கிலோ எடையுள்ள தங்க புத்தர் சிலை அமைக்க சுங்கத்திலுள்ள தங்கத்தை வழங்கியமை பொலிஸ் விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

பொதுச் சொத்தை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் சந்தேக நபர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதாக நிதி மோசடிப் பிரிவு நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

இந் நிலையிலே இரு சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கு நீதிவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த மோசடி தொடர்பில் விசாரணை நடத்தி ஒக்டோபர் 8 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் கட்டளையிட்டுள்ளார்.



# ஐ.தே.க. வேட்பாளர் யார்? புதன்கிழமை தெரியவரும்

## ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல்



கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை அறிவிக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது முதல் வேட்பாளர்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தி வரும் நிலையில், ஐ.தே.க. இன்னமும் தமது வேட்பாளரின் பெயரை அறிவிக்கவில்லை.

இந்த நிலையில், வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும், ஐ.தே.க. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும், நாடு திரும்புமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை வேட்பாளரை தெரிவு செய்வதற்கே அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

அதேவேளை, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன், கூட்டணி மற்றும் அதன் சின்னம் தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதற்கிடையே ஐ.தே.க. இனிமேலும் தாமதிக்காமல், விரைவில் தமது வேட்பாளரின் பெயரை அறிவிக்கவேண்டும் என்று சிவில் சமூக அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.

ஐ.தே.க. யாப்பின் 91ஆவது பிரிவுக்கு அமைய, கட்சியின் செயற்குழுவே வேட்பாளரைத் தெரிவு செய்யவேண்டும் என்றும், ஏற்கனவே ரணசிங்க பிரேமதாஸ, காமினி திசநாயக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அவ்வாறே செயற்குழுவினால் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்று, ஐ.தே.கவில் ஒரு பிரிவினர் வாதிட்டு வருகின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# யாழ். பல்கலைக்கழக நியமனம் குற்றச்சாட்டை மறுக்கும் ஹக்கீம்!

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர்கள் ஆள்சேர்ப்பு விடயத்தில் இன, பிரதேச பாகுபாடுகள் பார்க்கப்படவில்லை என்று என நீர்வழங்கல் நகர திட்டமிடல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிலையியற்கட்டளை 27/2இன் கீழ் யாழ். பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக ஆள்சேர்ப்பு தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற கொள்கைக்கு நானும் உடன்படுகின்றேன். அதனடிப்படையிலே இந்தப் பெயர்ப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக ஊழியர் நியமனங்களில் முறைகேடுகள் இருக்கின்றன என யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் பெப்ரவரி நாடாளுமன்று கலைக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம் தகவல்



கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் அவர் தனக்குச் சாதகமான அரசை ஏற்படுத்திக் கொள்வதற்காக 2020 பெப்ரவரி மாதமளவில் நாடாளுமன்றத் தைக் கலைத்து விடுவார் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம் தெரிவித்தார்.

எத்தகைய ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கான அவசர விபத்துச் சிகிச்சைப் பிரிவுக் கட்டடத் தொகுதிக்கென எம்மால் ஒதுக்கப்பட்ட 200 கோடி ரூபா நிதியின் மூலம் அந்த வேலைத் திட்டம் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்முனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அஹமட் அலி வைத்தியசாலையின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழன் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து, சுகாதார அமைச்சராக ராஜித சேனாரத்ன பொறுப்பேற்ற பின்னரே இந்த நாட்டில் சுகாதாரத்துறை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த அரசின் காலத்தில் கிழக்கு மாகாண வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதில் நான் கூடிய கவனம் செலுத்தியிருந்தேன். அதனால் பல வைத்தியசாலைகளில் நிலவி வந்த குறைபாடுகள் பெருமளவில் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. பௌதீக வளங்கள், பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மஹரகமவில் மாத்திரம் அமைந்திருந்த புற்றுநோய் வைத்திய சேவைகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு விஸ்தரிப்பு செய்துள்ளோம். கொழும்பு, கண்டி போன்ற வைத்தியசாலைகளுக்கு பெற வேண்டிய பல சேவைகளை எமது பகுதி வைத்தியசாலைகளில் ஏற்படுத்தியுள்ளோம். டயலஸில் சேவைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை மற்றும் அஷ்ரப் வைத்தியசாலை என்பவற்றுக்கு சி.ரி.ஸ்கேன் இயந்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எமது பகுதியிலுள்ள வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்தி, அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதே எனது இலக்காக இருக்கிறது.

நான் பதவியில் இருக்கும்போது முடியுமானவற்றை செய்து முடிப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்து வருகின்றேன். ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் 2020 பெப்ரவரி மாதமளவில் நாடாளுமன்றம் கலைக்கப்படும். அதன் பின்னர் நாங்கள் மீண்டும் பதவிகளில் இல்லாமல் போகலாம். அதனால் இருக்கின்ற இன்னும் சொற்ப காலப்பகுதிக்குள் முடியுமானதை சாதிப்பதற்கு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றேன்.

அஷ்ரப் வைத்தியசாலையில் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்ட ஐந்து மாடிகளைக் கொண்ட அவசர விபத்துச் சிகிச்சை பிரிவு இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது குறித்து எம்மீது குற்றம் சுமத்தப்படுகிறது. இதுவொரு ஏமாற்று வேலையா என்று முகநூலில் கேட்கின்றார்கள். நான் ஒருபோதும் நிதியொதுக்கீடு செய்யாமல் எந்தவித வேலைகளையும் ஆரம்பித்து வைப்பதில்லை. இதற்கும் நிதியொதுக்கீடு செய்து விட்டே சுகாதார அமைச்சரை கூட்டி வந்து அடிக்கல் நட்டேன். ஆனால் அந்த வேலைத்திட்டத்தை பொறுப்பேற்ற ஒப்பந்த நிறுவனத்தின் இழுத்தடிப்பே தாமதத்திற்குக் காரணமாகும்.

விலைமனு கோரப்பட்டு, உரிய விதிமுறைகளின் பிரகாரம் பொறுப்பளிக்கப்பட்ட ஒரு வேலைத்திட்டத்தில் இருந்து குறித்த நிறுவனத்தை இலகுவாக நீக்கி விட முடியாது. அந்த நிறுவனம் வேறு சில வைத்தியசாலைகளில் வேலைகளை ஆரம்பித்து கொண்டு செல்கின்றது. இந்நிலையில் அஷ்ரப் வைத்தியசாலைக்கான ஒப்பந்தத்தை வேறு நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு முறைப்படி நடவடிக்கை எடுத்து வருகின்றோம். நிச்சயம் இந்த வைத்தியசாலையில் அவசர விபத்துப் பிரிவு அமைக்கப்படும் என்று உறுதியாக சொல்லிக் கொள்கின்றேன். அதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை – என்றார். (ஐ)



# ஆட்சி நடத்தத் தெரியவில்லையெனில் எம்மிடம் தாருங்கள் நடத்துகின்றோம்

## அரசுக்குச் சவால் விடுகின்றார் ரவிகரன்

**முல்லைத்தீவு, செப். 21**
**அரசாங்கத்திற்கு ஆட்சி நடத்தத் தெரியவில்லை எனில், எம்மிடம் தாருங்கள் நாம் திறம்பட ஆட்சி நடத்திக் காட்டுவோமென வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**
**முல்லைத்தீவில், வேலையற்ற பட்டதாரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு, முல்லைத்தீவுப் பட்டதாரிகளை நியமிக்குமாறு கோரிய அவர், முல்லைத்தீவுப் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படாதுள்ள நிலையில், தென்னிலங்கைச் சிங்களவர்களுக்கு முல்லைத்தீவில் நியமனம் வழங்கப்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு மவட்டத்தைப் பொறுத்தவரை, மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதற்கு அப்பால், சுனாமியால் கூட பாதிக்கப்பட்டிருந்தது.

இப்படியான நிலையில், உலக வங்கியின் அறிக்கையின்படி, வறுமையான மாவட்டத்திற்குள் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளடங்குகின்றது.

இவ்வாறு உலகவங்கி, வறுமையான மாவட்டமாக, அறிவித்த காலத்திலிருந்து இவ்வளவு காலமாக, அரசு முல்லைத்தீவு மாவட்டத்தை வறுமையிலிருந்து நிமிர்த்த முடியாமைக்குக் காரணம் என்ன?

குறிப்பாக பட்டதாரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் வழங்காமை கூட முக்கிய காரணமாகும்.

எமது மாணவர்கள் உள்வாரியிலும் சரி, வெளிவாரியிலும் சரி, பல இடர்பாடுகளுக்கு மத்தியில் படித்து பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

முன்பு யுத்த காலப் பகுதியிலே, மின்சார வசதிகூட இல்லாத காலத்தில், குப்பி விளக்குகளிலேயே மாணவர்கள் கல்வி கற்றனர். இவ்வாறு பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பல வருடங்கள் கடந்தும் கூட, பட்டங்களைப் பெற்ற நிலையில், தற்போது அவ்வாறு அவர்கள் பெற்ற பட்டங்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படாமையால் வீதிக்கு வந்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை, அனைவரும் வீதிக்கு வந்து போராட்டத்தைச் செய்யவேண்டும் என்று அரசு ஊக்குவிக்கின்றதா எனக் கேட்க விரும்புகின்றேன்.

பட்டம் பெற்ற பட்டதாரிகளின் வறுமையைப் போக்க வக்கில்லாத இந்த அரசு, அவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்காது, இழுத்தடிப்புச் செய்கின்றது.

இனி தேர்தல் நெருங்குகின்றது, தேர்தலுக்காக அனைவரும் முளைத்துக் கொண்டுவருவார்கள். ஆனால் அவ்வாறு வருபவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய வறுமையைப் போக்கினார்களா?

இந்த வெளிவாரி மற்றும், உள்வாரிப் பட்டதாரிகளின் நியமனங்களை உடனடியாக வழங்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்



படுத்திக் கொடுப்பதுதான், ஒரு சிறந்த அரசுக்குரிய வழி என்பதனைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இந்தப் பட்டதாரி மாணவர்கள் ஏற்கனவே கல்வி கற்கும்போதும் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்தது மட்டு மல்லாது, தற்போது பட்டத்தைப் பெற்றுவிட்டும் வீதியில் நின்று பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும் நிலைக்கு அரசு தள்ளியிருக்கின்றது.

இந்த நிலையில்தான் இந்தப் பட்டதாரிகள் இங்கே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தியாகி திலீபனும் தமிழினத்தின் விடிவிற்காக இவ்வாறான ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருந்தார். அவரின் அத்தகைய போராட்டத்துக்கு இன்றும் இந்த உலகே மரியாதை செலுத்துகின்றது. இந்த மாணவர்களுக்கும் அத்தகையதொரு நிலையை ஏற்படுத்தவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதுள்ளபோதும், பல பரிந்துரைகளின் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்ட வெற்றிடங்களுக்கு தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்களவர்களை நியமனம் செய்கின்றனர்.

இந்த முல்லைத்தீவு மாவட்ட மக்களும், இந்த நாட்டினுடைய பிரஜைகள் என்பதை ஏற்றுக்கொண்டு, இங்குள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

தென்னிலங்கையில், காலியில், ஹம்பாந்தோட்டையில் வேலைக்கான நியமனங்களைத் தாருங்கள் என இந்த மாணவர்கள் கேட்கவில்லை. முல்லைத்தீவில், எங்களுடைய இடத்தில், எங்களுடைய இடத்திலுள்ள வெற்றிடங்களை எங்களை வைத்து நிரப்புங்கள் என்றுதான் அவர்கள் கேட்கின்றனர்.

ஆட்சி நடத்தத் தெரியாவிட்டால் தாருங்கள் நாங்கள் ஆட்சி நடத்திக் காட்டுகின்றோம் – என்றார். (ஐ)




## ராணுவத்தின் பயிற்சியால் வவுனியா மக்கள் பதற்றம்!

வவுனியா, செப். 21

வவுனியா – செட்டிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டமையால் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று முன் தினம் காலை அந்தப் பகுதியில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு போர்க்காலத்தை நினைவூட்டுவதுபோல, பெருமளவான துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் பொதுமக்கள் கடும் அச்சமடைந்தனர்.

எனினும் இந்த இராணுவக் குவிப்பு பயிற்சி நடவடிக்கைக்காகவே மேற்கொள்ளப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தது. எனினும் இராணுவப் பயிற்சி என்ற பெயரில் அப்பகுதி மக்கள் மீது கடுமையான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்றும், தமது இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது எனவும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் விசனம் தெரிவித்திருந்தனர். (ஐ)

## யாழ். என்டர்பிரைசஸ் ஸ்ரீலங்கா கண்காட்சியில் 2 இலட்சம் பேர்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற என்டர்பிரைஸ் சிறிலங்கா கண்காட்சி வெற்றிகரமாக அமைந்ததாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சி.முத்துக்குமாரண வாய்மூலமாக கேட்ட கேள்வி ஒன்றிற்கு பலிலளிக்கையிலேயே நிதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

4 நாள்களாக நடைபெற்ற இந்த கண்காட்சியை 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெற்றிகரமான கண்காட்சி இதுவாகும். இந்த கண்காட்சி மூலம் அங்குள்ள மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவியது.

மொனராகலை மாவட்டத்தில் நடைபெற்ற கண்காட்சி மூலமும் பலர் நன்மை அடைந்துள்ளனர்.

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு 15 இலட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெரும் எண்ணிக்கையான இளையோர்கள் இந்த



நிகழ்வில் கலந்து கொண்டனர் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கண்காட்சிக்கு அனுமதிக் கட்டணமாக 20 ரூபா பணம் அறிவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விபத்தில் படுகாயமுற்ற இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 21

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் அதன் பின்னிருக்கையில் இருந்து பயணித்த இளைஞன் வீதியில் தூக்கி எறியப்பட்டார்.

இளைஞன் மீது ஹைஏஸ் வாகனம் ஏறியதால் படுகாயமடைந்த அவர் நேற்று முன் தினம் நள்ளிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் நேற்று அதிகாலை உயிரிழந்நதார்.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

தொண்டமனாறு கெருடாவிலைச் சேர்ந்த அருந்தவராசா அரவிந்தன் (வயது – 22) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தொண்டமனாறுக்கு இளைஞர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை மோட்டார் சைக்கிள் சறுக்கி விபத்துக்குள்ளாகியது என்று விசாரணைகளின் பின்னர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பின்னிருக்கையிலிருந்து பயணித்த இளைஞன் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில் அவர் மீது வீதியால் பயணித்த ஹைஏஸ் வாகனம் ஏறிச் சென்றுள்ளது. அந்த ஹைஏஸ் வாகனச் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# புலிகளின் புனர்வாழ்வுக்காக சிறப்பாக உழைத்தவர் கஜதீர



### அனுதாபப் பிரேரணை மீதான உரையில் மஹிந்த புகழாரம்

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த 13ஆயிரத்துக்கும் அதிக இளைஞர், யுவதிகளுக்குப் புனர்வாழ்வு அளித்து அவைகளை சமூகமயப்படுத்தும் பொறுப்பை சந்திரசிறி கஜதீர சிறந்தமுறையில் மேற்கொண்டிருந்தார் என எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசிறி கஜதீரவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சந்திரசிறி கஜதீர 22வருட நாடாளுமன்ற வாழ்க்கையில் பல பொறுப்புக்களை வகித்திருந்தார். அவர் பிரதி அமைச்சராக, அமைச்சராக இருந்து மேற்கொண்ட சேவை பாராட்டத்தக்கது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்துப் பொறுப்புக்களையும் எதிர்பார்த்ததற்கும் மேலான தரத்தில் அவர் மேற்கொண்டிருந்தார். குறிப்பாக அவர் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக இருந்து மேற்கொண்ட சேவையை மறக்க முடியாது.

சிறையில் இருக்கும் பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்காக வரலாற்றில் முதல்தடவையாக வட்டரக்க சிறைச்சாலையில் வட்டரக்க சுனித்த என்ற பெயரில் தேசிய பாடசாலையை ஆரம்பித்தார். அதனை திறந்துவைக்க என்னை அழைத்திருந்தார். – என அவர் கூறினார்.

## வடக்கில் கோட்டாவின் வெற்றிக்கு களமிறங்கும் ரெஜினோல்ட் குரே!

கொழும்பு, செப். 21

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியில் இணைந்து கொண்டார்.

பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிடம் இருந்து அவர் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாவை வெற்றி பெறச் செய்வதற்காக, வடக்கு மாகாணத்தில் எல்லா நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு ரெஜினோல்ட் குரேயிடம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமத்தகடு பெற்றுக்கொள்ளல்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் 31.12.2019 இற்கு முன்பாக மாநகர சபை முன்னரங்க அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டிக்குரிய உரிமத் தகட்டினை ரூ 10.00 இனைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். தவறின் காவல்துறையின் பரிசோதனையின் போது பல அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதை அறியத் தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**


யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்



★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலண்ட் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2019 இல் வெளியிடப்பெற்றது.